1453

THE "AGRICULTURIST"

A monthly Journal devoted to Agriculture and its allied subjects.

"கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
17 JUN 1927
MADRAS

Vol. 10 புத்தகம் 10	பிரபவஹூ சித்திரைமீ 1௨ 1927-ம்ஹூ ஏப்ரல் மீ 13௨	**No. 1.** பிரதி. 1.

Contents.

New year Prabava	1
Some improvements to be copied & followed from Japanese Agriculturists.	2
Importance of Ploughing in Agriculture.	5
Proverbs-Ploughing.	8
Plant food	9
Cattle section Local treatments	14
Points to be observed in raising Nursery & planting single planting of Paddy	16
Correspondence	17
News & Notes:	8, 16, 25

பொருளடக்கம்.

"பிரபவ" வருஷம்	1
ஜப்பான் விவசாயிகளிடமிருந்து கற்றுக்கொண்டு அனுஷ்டிக்க வேண்டிய சில சீர்திருத்தங்கள்.	2
உழவும் அதன் பெருமையும்	5
உழவைக் குறிக்கும் பழமொழிகள்	8
பயிருணவு-பீடிகா விஷயங்கள்	9
கால்நடைப் பகுதி உள் நாட்டு சிகிச்சைகள்	14
நாத்தங்காலில் விதை குறைத்துவிட்டு ஒற்றைநாத்தாக நடுதல்	17
கடிதம்	16
குறிப்புகள்.	8, 16, 25

Editor: Rao Bahadur J. Chelvaranga Raju
"Jagannadha Baugh" Saidapet,

Annual Subscription including Postage Re. one only.

Copy Right] [Registered.

"STARBRAND"

ஸ்டார் பிராண்ட்

SULPHATE OF AMMONIA

ஸல்பேட் ஆப் அம்மோனியா

ராமச்சந்திர ரெட்டியார்:—உடையாரவாள், உங்களுடைய வண்டியில் போகும் மூட்டைகள் என்ன?

குழந்தைவேலு உடையார்:—நல்ல கேள்வி கேட்டீர்; நக்ஷத்திரமார்க்கு ஸல்பேட் ஆப் அம்மோனியா' ஸூபர்பாஸ்பேட், என்னும் எருக்களைப்பற்றி கேட்டதுகூட இல்லை போலும்?

ராமரெட்டி:—ஊரிலெல்லாம் உபயோகிக்கும் புதிய உரங்கள் இவைகள் தானா? சரிதான்; இந்தப் பக்கத்தில் ஏராளமாய நெல் வயலுக்கு இவை இரண்டையும் உபயோகிக்கிறார்களாமே; அப்படியாயின் கருமபிற்கும் இதைப் போடலாமோ?

கு. உ:—தடையென்ன? நானே இவைகளை என் நெல்லுக்கும் கரும்பிற்கும் உபயோகித்து நல்ல லாபத்தை யடைந்திருக்கிறேன். மற்றும் கோயமுத்தூரிலுள்ள என். தம்பியும், கேழ்வரகு, புகையிலை, மிளகாய் முதலியவைகளுக்கு உபயோகித்து மிகுந்த பலனை அடைந்திருக்கிறதாகத் தெரிவித்திருக்கிறான். வெங்காயம், கொடிக்கால் காய்கறி தினுசுகள் தென்னை வாழை முதலிய பழ மரங்களுக்கும உபயோகித்து வருகிறார்களாம, இது மாத்திரமல்ல, இதில் ஒருவித துர் நாற்றமும் இல்லை. மதாசாரக கொள்கைக்கு விரோதமான வஸ்துவின் ஸமபந்தமேகிடையாது; விலையோ மிகவும்ஸரஸம்.

ராமரெட்டி.—அப்படியானல் இவைகளின் விலை யென்ன?

கு. உ.—ஸல்பேட் ஆப் அம்மோனியா 80 ராத்தல் கொண்ட மூட்டை ஒன்றுக்கு ரூ. 8-4-0 வீதமும், 112 ராத்தல் கொண்ட ஸூபர் பாஸ்பேட் மூட்டை ஒனறுக்கு ரூ: 5-8-0. வ தமும்; ஸாமல்கோட்டை தெனாலி, நெல்லூர், பெஜவாடா, ஹாஸ்பெட், கடபபை முதலிய இடங்களிலும், தமிழ்நாட்டில சென்னை. திருவள்ளூர், காஞ்சீபுரம், மதுராந்தகம், விழுப்புரம், குடியாத்தம், தஞ்சாவூர் திருச்சினாப்பள்ளி, மதுரை திருநெல்வேலி, பொள்ளாச்சி கோயமுத்தூர் ஈரோடு முதலிய இடங்களிலும் மைசூர் ராஜ்யத்தில் பெங்களூர், மைசூர், தொட் பலாப்பூர, சிக் பலாபபூர், சிக் மகளூர், ஹாசென் முதலிய இடங்களிலும், இண்டோ அக்ரி லிமிடெட்டால் ஸ்தாபிக்கப்பட்டுள்ள டெப்போக்களில் கிடைக்கும்.

இவர்களின் சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டே பக்கத்து வயலிலிருந்துவரும் ஆராவமுத அய்யங்கார் எங்கள் கிராமத்தோர் அனைவரும் சேர்ந்து மொததமாய வாஙகினதில் விலை இன்னும் ஸரஸமாய் கிடைததது ஆலும் நீஙகளும் இவ் விதமே சேர்ந்து மொத்தமாய் சென்னை ஷாவாலெஸ் கம்பெனியாரவர்களுக்கு எழுதிப் பெற்றுக் கொள்ளலாம்.

பர்ட்டிலைஸர் ப்ராபகண்டா ஆப் இந்தியா லிமிடெட்

காரியதரிசிகள்:—ஷாவாலஸ் அண்டு கம்பெனி, மதராஸ்.

Fertiliser Propaganda of India, Limited

Secretaries Shaw Wallace & Co. MADRAS,

THE "AGRICULTURIST"

A monthly Journal devoted to Agriculture and its allied subjects

"கிருஷிகன்"

ஓர் மாதாந்தர விவசாயப் பத்திரிகை.

OFFICE OF THE REGISTRAR CO... 17 JUN 1927 * MADRAS

Vol. 10 புத்தகம் 10	பிரபவ௵ சித்திரை௴ 1௳ 1927-ம்௵ ஏப்ரல்௴ 13௳	No. 1. பிரதி. 1.

New year "Prabava"

"பிரபவ வருஷம்"

"கிருஷிகன்" 10ம் ஆண்டு புது வருஷத்தில் ஆரம்பமாவதோடு கால சக்கரம் சுழல்வதில் 60-ஆண்டுகளுக்கோர் முறை மாறும் புது வருஷமாகவுமிருப்பது சந்தோஷிக்கத்தக்கதே.

அவதியையும் அச்சத்தையும் விளைவித்து வந்த அக்ஷய ஆண்டு நிறைந்து, மனோசந்துஷ்டியையும், உற்சாகத்தையும், தேசக்ஷேமத்தையும் எதிர் பார்க்கும் பிரபவ வருஷத்தில் கால மழைகள் சுபிக்ஷமாய்ப் பெய்து, பயிர்களும் கால் நடைகளும் விருத்தியாகி ஏழைக் கிருஷிகரின் விசனத்தைப் போக்குமென்றே நம்புகிறோம்.

முந்திய அனுபோகங்களை அனுசரித்தும், பஞ்சாங்க ரீதியாயும் பார்த்தாலும் பிரபவ வருஷத்தில் கால மழைகள் சுபிக்ஷமாய்ப் பெய்யுமென்றும், எல்லாப் பயிர்களும் பூர்ணமான பலம் கொடுக்குமென்றும், உழவர் அபிவிருத்தி யடைவா ரென்றும் பசுக்கள், எருமைகள், ஆடு மாடுகள், பெருகி விருத்தியாகுமென்றும், பால், தயிர், நெய், தேன், வெல்லம், எண்ணெய் பழ தினுசுகள், முதலியவை அபரிமிதமாய்க் கிடைக்குமென்றும் நவதானியங்கள் நயக்குமென்றும் நம்புவதற்கு இடமிருக்கிறது.

அறுபது வருஷம் கழித்து வந்த பிரபவ வருஷம் நமது நாட்டுக்கும், நாட்டோருக்கும் பொதுவாக நன்மையைக்கொடுத்து நமக்குள் ஏற்பட்டிருக்கும் துவேஷங்களை யொழித்து, நற்புத்தி புகட்டிக் கிருஷிகருடைய குறைபாடுகளை நிவர்த்தித்து அனுகூலமடையும்படி அருள்புரியுமாறு ஸ்ரீமந்நாராயணனைப் பிராத்திக்கின்றோம்.

ஜப்பான் விவசாயிகளிடமிருந்து கற்றுக் கொண்டு அனுஷ்டிக்க வேண்டிய சில சீர்திருத்தங்கள்.

Some Improvements to be copied and followed by us from Japanese Agriculturists.

நமது தேசத்தில் ஒரு ஏக்ரா நிலத்தில் உண்டாகும் விளைவு ஜப்பான் தேசத்தில் அதில் நாலில் ஒரு பங்கு விஸ்தீரணத்தில் கிடைக்கிறது. இதற்கு அனேக காரணங்களிருந்த போதிலும் முக்கியமாய் நாம் அவர்களிடமிருந்து கவனிக்க வேண்டிய விஷயங்கள் ஒன்றிரண்டு உண்டு. அவைகளில் இப்போது எருவைப் பற்றி மாத்திரம் சற்று கவனிப்போம். "எருவில்லையானால் விளைவில்லை" என்னும் பழமொழி எல்லோருக்கும் தெரிந்த விஷயமானாலும் ஜப்பானியர் இதை முக்கிய கொள்கையாக வைத்துக் கொண்டிருக்கிறார்கள். பயிர்கள் சரியானபடி விளைவதற்கு முக்கிய காரணம் நிலம் மாத்திரம் அல்லவென்றும், நிலம்பயிரைத் தாங்கி நிற்கக் காரணமாயிருக்கிறதே தவிர மற்றப்படி நாம் நிலத்தில் போடும் எருவே விளைவுக்கு முக்கிய காரண பூதமாயிருக்கிறதென்றும் அவர்கள் எண்ணி விவசாயம் செய்கிறார்கள். ஜப்பான் தேசத்தில் ஒரு கிராமத்திலுள்ள சகலவித கழிவுப் பொருள்களையும் ஜாக்கிரதையுடன் கூட்டிச் சேர்க்கிறார்கள். நாம் சாதாரணமாய் புல்சற்றேனுமில்லாத கட்டாந்தரை போன்ற மந்தைகளில் கால் நடைகளை தினந்தோறும் மேய்ந்து வர விடும் வழக்கத்தைப் போலல்லாமலும், அவைகளை மந்தைகளிலிருந்து வந்த பின் மரத்தடியிலும் கட்டாந்தரைகளிலும் இராக்காலங்களில் கட்டி அவைகளிடும் சிறுநீரை சேகரிக்காமல் அவமாக்கியும், கிடைத்த சாணியைக் கூட சரியானபடி பந்தோபஸ்து செய்யாமலிருப்பதைப் போலல்லாமல், கால் நடைகளை தொழுவில் நிறுத்தி போஷித்து அவைகளின் நீரையும், சாணியையும் சரியானபடி சேகரித்துக் காப்பாற்றி உபயோகித்து வருகிறார்கள்.

நமது இராஜதானியில் கிருஷிகருக்கு கிடைக்கக் கூடிய எரு வகைகளை அவர்கள் சரியாய் சேகரித்து உபயோகப்படுத்துகிறார்களா வென்று யோசித்துப் பார்த்தால், எரு வகைகளில் அனேகத்தை சரியாய் உபயோகப்படுத்துவதில்லை யென்பது தெளிவாய் விளங்கும். அப்படி நஷ்டமாகிற அநேக வஸ்துக்களில் ஒரு வஸ்துவைக் குறித்து மட்டும் இம்முறை சற்று கவனிப்போம். இது என்னவென்றால் ஜீவஜெந்துக்களின் சிறு நீர் தான். அதை அனேகர் வெகு கேவலமான வஸ்துவென்றே நினைக்கிறார்கள்.

ஜப்பான் தேசத்தில் மனிதர்களிடும் சிறு நீரை வெகு ஜாக்கிறதையுடன் சேகரித்து எருவாக்குகிறார்கள். கால் நடைகளின் மூத்திரத்தையும் அப்படியேஉபயோகிக்கிறார்கள். நமது இராஜதானியிலோ மேல் சொன்ன முக்கிய எருசத்தை கொடுக்கக் கூடிய வஸ்துவை சேகரிப்பதில் கவனம் சற்று கூட செலுத்தப்படவில்லை. நாம் விவசாய வேலைகளுக்காக வைத்திருக்கும் கால்நடைகளின் சிறு நீரைப்பற்றி சற்று கவனித்துப் பார்ப்போம். விவசாய நிபுணர்கள் வெகு ஜாக்கிரதையுடன் கணக்கிட்டுப் பார்த்ததில் ஒரு நெல்லூர் தேசத்து மாட்டளவு பருமனுடைய மாடுநாள் ஒன்றுக்கு அனேகமாய் 3 முதல் மூன்றரை படி(பக்கா) சிறு நீர் விடுகிறதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். இதை தற்காலம் யாரும் சேகரிப்பதில்லை என்பது நன்றாய்த் தெரிந்த விஷயம். இப்படி சேகரிக்கப்படாததினால் ஒருவிவசாயிக்கு எவ்வளவு நஷ்டம் உண்டாகிறதென்பதைக் கவனிப்போம்.

நம்மைப் போலொத்த ஜீவஜெந்துக்கள் உட்கொள்ளும் உணவில் அதிகப் பாகம் சரீரத்துள் இரத்தமாகி, தசை எலும்பு, கொழுப்பு, மூளை, ரோமம், தோல் முதலியவைகளை வளர்க்கவும் போஷிக்கவும் உபகாரப்பட்டு மீந்த பாகம் மலம், ஜலம், வேர்வை போன்ற பொருள்களாய் உடலிலிருந்து கழிவாகிறது. ஆகையால் இக்கழிவுப் பொருள்களில் ஜீவஜெந்துக்கள் உண்ட உணவிலடங்கிய சில வஸ்துக்களிருக்கின்றன. சிறு நீரும் ஒரு கழிவுப்பொருள். ஆகையால் உணவுப் பொருள்களில் சில பாகம் அதிலுமிருக்கிறது.

ஜீவஜெந்துக்களின் உணவுப் பொருள்களெல்லாம் நிலத்திலிருந்தே விளைகின்றன வாகையால், சிறு நீரை நிலததில் மறுபடியும் சேர உபாயம் செய்தால், நிலத்திலிருந்து விளை பொருள் ரூபமாய் எடுபட்டவஸ்துக்களில் கொஞ்சமாவது திரும்பநிலத்தில் போய்ச்சேரும். இதிலிருந்து பொதுவாய் சிறு நீர் உபயோகமான எருச்சரக்கென்று அறிந்து கொள்ளக்கூடும்.

கால் நடைகளின் சிறு நீரை ரசாயனக் கூறுபாடு செய்து பார்த்ததில் அதில் சுத்த தண்ணீர் 100 க்கு அனேகமாய் 91பங்கும் மூலப் பொருள்கள் சுமார் 6–பங்கும், தாதுப் பொருள்கள் சுமார் 3 பாகமுமிருப்பதாய்த் தெரிகிறது. மேல் சொன்ன மூலப் பொருள்களில் அம்மோனியா யென்ற சத்து அனேகமாய் 100-க்கு 2பாகமிருப்பதாகவும் கணக்கிட்டிருக்கிறார்கள். இந்த அம்மோனியாவில் நைட்ரஜன் என்று சொல்லும் வெடியுப்பு வாயு அடங்கியிருக்கிறது, இது பயிர்

களுக்கு பிரதானமான ஒரு உணவுப் பொருள். உடம்பில் இரத்தம் இல்லாவிட்டால் எவ்வாறு தேகம் இளைத்துப்போமோ அவ்வாறே இவ் வஸ்து இல்லையானால் பயிர் செழிப்பாய் உண்டாக மாட்டாது. பயிர்களுக்கு முக்கியமாய் உபயோகமாகும் பயிருணவு வஸ்துக்கள் மூன்று. அவை a. நைட்ரெஜன் என்னும் வெடியுப்பு வாயு. b. போட்டாஷ் என்னும் சாம்பல்காரம். c. பாஸ்பாரிக் ஆசிட் என்னும் பிரகாசதாமிலம். இவைகளில் முதலில் சொன்ன பயிருணவு சிறுநீரில் 100க்கு இரண்டு பாகமிருக்கிறதென்று மேலே குறிப்பிட்டாச்சுது. இரண்டாவதான சாம்பல் காரம் 100க்கு இரண்டு பங்கிருக்கிறது. மூன்றுவதான பிரகாசதாமிலம் இல்லாமல் போனாலும் இரண்டு சிறந்த பயிருணவுப் பொருள்கள் சிறு நீரிலிருக்கின்றன. ரசாயன சாஸ்திரிகளின் கணக்கின்பிரகாரம் ஒரு மாட்டிலிருந்துகிடைக்கக் கூடிய சிறு நீரை பந்தோபஸ்து செய்யாமல் அவமாக்குவதால் ஒரு வருஷத்தில் 30 ராத்தல் நிறையுள்ள அம்மோனியாவும் 30 இராத்தல் நிறையுள்ள சாம்பல் காரமும் வீணுகிறதென்று நன்றாய்த் தெரிகிறது. சாதாரணமாய் நாம் சாப்பிடும் அரிசியில் *100 பங்கில் மேல் சொன்ன வஸ்துக்கள் ஒவ்வொன்றும் ஒரு பங்குதானிருக்கிறது. ஆகையால் நெல் பயிருக்கு கால் நடைகளிலிருந்து கிடைக்கும் சிறு நீர் எவ்வளவு உபயோகமுள்ள வஸ்துவென்பது நன்கு விளங்கும். ஜப்பான் தேசத்து விவசாயிகள் நெல் பயிர் செய்வதில் ஜாஸ்தி பலன் அடைவது இவ்வஸ்துக்களை அவம் போகாமல் பாதுகாத்து, மற்ற எருக்களாகிய மலம் சாணி முதலிய எருக்களுடன் மனிதர்களுடைய மூத்திரத்தையும் கால் நடைகளின் சிறு நீரையும் சேர்த்து பந்தோபஸ்து செய்து எருவாய் உபயோகிக்கும் காரணத்தால் தான். ஜப்பானியர்களுக்கு ஒரு ஏக்கராவில் கிடைக்கும் விளை பொருள்களை நாம் உண்டு பண்ண நாலு பங்கு விஸ்தீரணம் வேண்டியிருக்கிறதென்று சொன்னதற்கு இதுவே ஒரு முக்கிய காரணம். ஆகையால் நமது கிருஷிகரும் சிறு நீரை அலக்ஷியமானவஸ்துவாயும் பரிகாசமாயும் எண்ணுமலும் அவம் போக்காமலும் பத்திரப்படுத்தி உபயோகிக்க வேண்டுமென்றும் அதனால் நமது கிருஷிகரும் ஜப்பானியரைப் போல் நல்ல மாசூல் அடையக்கூடு மென்றும் இவ் விஷயம் நமது சந்தாநேயர்கள் மனதில் பதியும்பொருட்டும் இவ்வியா

*சாதாரணமாய் ஒரு ஏகராவிலிருந்து நெல் பயிர் விளைவினால் பூமியிலிருந்து அப்புறப்படுத்தப்படும் தளைசத்து 30 இராத்தலுக்குமேல்போவதில்லை

சம் எழுதப்பட்டிருக்கிறது. இனி அடுத்த முறை இச் சிறு நீரை எவ் விதங்களில் நமது கிருஷிகர் பந்தோபஸ்து செய்து பலனடையலா மென்பதைக் குறித்துக் கவனிக்கப்படும்.

—⸎—

Importance of Ploughing in Agriculture.

உழவும் அதன் பெருமையும்

"ஒருவன் தனது குடித்தனத்தைப் பல்வேறு வகையிலும் உயர்த்துவான் கருதிச் செய்கின்ற பற்பல முயற்சிகளுள் எவ்வித முயற்சியானது சாலச்சிறந்தது" என வினவுவாராயின் மூன்றெ ழுத்தையுடைய "உழவு" என்னும் தொழிலில் முயற்சியைச் செலுத்துவதே தலைச்சிறந்தது என்று சொல்வது மிகையாகாது. இதற்கு மறுப்புக் கூறப்புகும் எவரையும் தற்கால நாகரீகப்பித்தம் தலைக்கேறியவ ரென்றே கூறலாம். வாணிபர் வேளாளர் கற் றோர் மற்றோர் யாவருக்கும் இடங்கொடுக்கும் தொழில் உழவுத் தொழில் ஒன்றே பகுத்தறிவையுடைய யாவருக்கும் உரித்தாகி யது. இவ்வுழவுத்தொழிலொன்றே சாதனமுடைய எவரும் வெறுத் துத்தள்ளாமல் மிகவிருப்புடன் ஏற்றுக்கொள்ளும் தொழில் இவ்வுழ வுத்தொழிலே. உலகம்மெச்சும் திருக்குறளைத் தமிழில் ஓதின தெய் வப் புலமைவாய்ந்த நமது நாயனாரும் "சுழன்று மேர்ப் பின்ன துலக மதனாலுழந்து முழவே தலை" என்னுங்குறளை தமது நூலில் உழவு என்னும் அதிகாரத்தில் முதலில் அருளியுள்ளதும் இதற்குச் சான் றாகும். உழவுத் தொழிலைச் சிறப்பித்துக் கூறும் பழமொழி பல வற்றுள் சில வற்றை ஈண்டு இறுதியில் கூறியுள்ளதை ஒவ்வொன் றாக ஓதி அதன் ஆழ்ந்த கருத்தைக் கற்றோரே அறிமின்.

மற்ற பாஷைகளில் உச்சரிப்பதற்கில்லாத "ழ" கர வெழுத் தையுடைத்தாயுள்ள மூன்றெழுத்தாலாகிய "தமிழ்" எங்ஙனம் சிறப்பும் பெருமையும், யாவரும் எளிதில உணரும் கலப்பற்றத் தனிப்பட்ட அழகிய பாஷையோ எங்ஙனம் "ழ" கரத்தையுடைய "பழம்" என்னும் மூன் றெழுத்தாலாய பொருள் இல்லறத்தானுக் கும் துறவறத்தானுக்கும், விருத்தாப்பியருக்கும் பாலருக்கும், சுக முள்ளவருக்கும் வியாதியஸ்தருக்கும், தனவந்தனுக்கும் எளியோ னுக்கும், ஆசாரமுடையோருக்கும் பற்ற யாவருக்கும் வித்தியாச மில்லாமல் உதவக் கூடியதும், சுகத்தையும், பலத்தையும் ஆயுள்

விருத்தியையும் தரத்தக்க பொருளோ; எவ்விதம் மிருக ராஜனென்னும் சிங்கமிருப்பினும் "ழ" கரவெழுத்தை யுடைத்தா நின்று மூன்றெழுத்தாலாய வேழம் என்னும் யானை மிகவும் கெம்பீரமும், திடகாத்திரமும் சாதாரண மனிதனும் வசப்படுத்தக் கூடியதும், நுண்ணறிவை யுடைத்தாயுள்ளதும், விலையுயர்ந்ததும், தெய்வ காரியங்களுக்காகத் தேவாலயங்களில் வைக்கப்பட்டுச் சிறப்புடையதோ அவ்விதமே மற்ற எவ்வித பாஷைகளிலும் உச்சரிக்க முடியாத "ழ" என்னும் ஒலியைப் பெற்ற எழுத்தை இடை யெழுத்தாய் பெற்று மூன்றெழுந்தாலாகிய "உழவு" என்னும் தொழில் தீவிர பரபரப்பைக் காட்டிவரும் நமது தாய் நாட்டிற்குத் தலைச்சிறந்ததும் அத்தியாவசிய மென்பதையும் உணர வேண்டுவதவசியம். குற்றமிருக்கின் கற்றோர்பொருக்க.

நெற்றி வேர்வை நிலத்தில் சிந்த உழுவதின் உழைப்பினால் நேரிடுகின்ற உழவரின் மெய்வருத்தத்தை நேரில் கண்ணுற்று இத் தொழில் தவிர ஏனைய தொழில்களை யெல்லாம் புரிந்து திரிகின்ற யாவரும் முடிவில் ஏர் கொண்டு உழும் உழவர் வாயலில் நிற்பதாகவே முடியும். அன்பர்காள்! இவ்வித உழவுத் தொழிலுக்கு மிக்க உபகாரமாயிருப்பது நமது "கிருஷிகன்" என்னும் சஞ்சிகை ஒன்றே நமது தமிழ் நாட்டில் உலவிவருவது. இது ஒன்றே விவசாயத்தைப் பற்றி மாத்திரம் எடுத்தோதுவது. மற்ற பத்திரிகைகளைப் போலல்லாமல் இது வொன்றே உழவருக்குச் சத்திய நேசன், இதை நடத்திவரும் பேருபகாரிகளுக்குக் கடவுள் கருணை கூர்ந்து தேகசுகத்தையும நீண்ட ஆயுளையும் பொருளையும் கொடுத்தருளுமாறு பிரார்த்திப் போமாக.

'கிருஷிகன்' இரு நான்காண்டு மறைந்துத் தன்னைப் பலப்படுத்திக்கொணடு மீண்டும் தோன்றி உலவ வாரம்பித்தது. தற்போது தனது ஒன்பதாம் பிராயத்தை ஓர் இடையூருமின்றிச் செவ்வனே கழித்தது. அதற்கு வாழ்த்துக் கூறிப் போற்றுவோமாக. மேலும் அதன் பிராயத்திற்குத் தகுந்தபடி இப்பத்திரிகை சிறந்த விஷயங்களைக்கொண்டுவிளங்க வேண்டுமானல் நாமேஅதற்குத்தக்க வழிதேட வேண்டுவதே யல்லாது பத்திரிகைக் குடையோரை எதிர்ப்பார்ப்பதில் சற்றும் பயனில்லை. இப் பத்திரிகைக் குறிய மிகவும் குறைந்த சந்தாவை நோக்கினும் விளம்பரங்கள் அதிக மில்லாமலிருப்பதை யோசிக்கினும் இது இலாபத்தைக் கருதி நடத்துவதல்ல வென்பதுத்

தெள்ளிதில் விளங்கும். இது பரோபகாரத்தை யுத்தேசித்த செயலாகுமென்பதிற் சற்றும் ஐயமில்லை. குறைந்த சந்தாநேயர்களைக் கொண்டு நடத்தப்பட்ட பத்திரிகைகள் எத்தனையோ தோன்றிச்சரிவர நடக்காமல் நின்று விட்டன. அவ்விதம் இதையும் செய்ய கனவிலும் எண்ணாதீர்கள். எல்லாக் காலங்களிலும் இக்கிருஷிகனைப் போற்றி ஆதரிப்போமென்று கெம்பீரமாகச் சொல்ல முன்வாருங்கள். அதற்கறிகுறியாக ஒவ்வொருவரும் யாவரையும் சந்தாதாரராய்ச் சேரும்படித் தூண்டுங்கள். உங்களது இஷ்டர்களைக் கட்டாயப் படுத்துங்கள். பொருள் படைத்த பெரிய நிலச்சுவான் தார்கள் மனமுவந்து இப்பத்திரிகைக்குப் போஷகராகவிருக்க விருப்பம் என்று கூறுங்கள். அங்ஙனம் செய்யவில்லையெனின் நமது விவசாயத்தொழில் முன்னேற்ற மடைவதற்கு நாமே முட்டுக் கட்டைப் போட்டவர்களாவோம்.

புதிய சந்தா நேயர்களைச் சேர்ப்பதால் நாம் ஓர் சிறந்த தானத்தைச் செய்தவர்களுக்குச் சமானமாவோம். தானத்தில் சிறந்தது அன்னதானம். அதனிலும் சிறப்புற்றது கல்விதானம். புதிய சந்தா நேயரைச் சேர்ப்பிப்பதால் நாம் இரண்டு தானங்களையும் ஒருங்கே செய்தவராவோம். எங்ஙனமெனின் கிருஷிகனைப் பெற்ற ஒவ்வொருவரும் நூதன விவசாயக் கல்வியைக் கற்றுக் கிருஷிக ஞானத்தை அடைகிறோம். அவ்விக ஞானத்தைக் கொண்டு அன்ன தானத்திற்கு ஆதாரமாயுள்ள விளைவின் பெருக்கை மேன்மேலும் விருத்தி செய்கிறோம். முடிவில் இதனால் பசிப்பிணி நீங்கித் தேசம் க்ஷேமமடைகிறது. ஆகையால் நண்பர்களே! தமிழ் நாட்டின் முன்னேற்றத்தைக் கோரும் தேச நலப் பிரியர்களே! சகோதரர்களே! நமது 'கிருஷிகன்' இன்னும் அதிகப் பக்கங்களைக் கொண்டு சிறந்த நூதன விஷயங்களை வியாசங்களாகப் பெற்று யாவரும்எளிதில் உணரும்படி படங்களுடன் விரிவாக வெளிவந்து உலவ வேண்டுமானால், பழைய சந்தா நேயர்கள் மீண்டும் விடாமல் சந்தாதாரராயிருந்தும் தமது நண்பர்களையும் கிருஷிகனுக்குச் சந்தாதாரராய்ச் சேர்த்தும் அதில் அடங்கியிருக்கும் சிறந்த விஷயங்களை அதிகக்கல்வியில்லாத எல்லாக் குடியானவர்களுக்கும் எடுத்தோதியும் வந்தால் பேருபகாரத்தைப் புரிந்தவராவீர்கள். அவ்விதமே எல்லாம் வல்ல ஆண்டவன் இன்னருள் புரிவாராக.

ஆ. சு. நித்யகல்யாண ரெட்டி

Proverbs.—Ploughing.

உழவைக் குறிக்கும் பழமொழிகள்.

ஆற்றங்கரையின் மரமு மரசறிய
வீற்றிருந்த வாழ்வும் விழுமன்றே யேற்ற
முழுதுண்டு வாழ்வதற் கொப்பில்லை கண்டீர்
பழுதுண்டு வேறோர்பணிக்கு."

அழிவே யழியினும் உழவேயுழு.
மேழிச் செல்வம் கோழைபடாது.
தொழுதூண் சுவையினும் உழுதூணினிது.
பயிரையிட்டுப் பாவத்தைத்தொலை.
ஏரையிகழ்ந்தார் பேரையிழந்தார்.
சீரைத் தேடின் ஏரைத்தேடு.
ஏர் நடந்தால் பேர் நடக்கும்.
அழியாச் செல்வம் விளைவேயாகும்.
குடித்தனம் செழித்தால் துரைத்தனம் செழிக்கும்.
செங்கோலைக் காக்குங்கோல் ஏரடிக்கும் சிறுகோலே.
உழவின் மிகுந்த ஊதியமில்லை.
விவசாயமோ ரசவாதமோ?

உழவரைக் குறித்தது

உழுவாருலகத் தார்க்காணியஃ தாற்றா
தெழுவாரை யெல்லாம் பொறுத்து.
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாந்
தொழுதுண்டு பின்செல்பவர்.
இரவாரிரப்பார்க் கொன்றீவர்
காவாது கை செய்தூண் மாலையவர்.
வேதநூன் முதலாகி விளங்குகின்ற கலையனைத்தும்
ஓதுவாரெல்லாரும் உழுவார் தந்தலைகடைக்கே
கோதைவேன் மன்னவர் தங்குடைவளமுங் கொழுவளமே
ஆதலால் இவர் பெருமையார் உரைக்கவல்லாரே.

குறிப்பு.

இலங்கைத் தீவிலுள்ள மொத்த விஸ்தீரணத்தில் சுமார் ஐந்தில் ஒரு பங்கே சாகுபடிக்கு வந்திருக்கிறதென்றும் அதில் தென்னைப் பயிர் ஏறக்குறைய 9-லட்சம் ஏகரில் பயிர் செய்யப்பட்டிருப்பதாயும் நெல் பயிர் எட்டரை லட்ச ஏகரிலும், தேயிலை நாலரை லட்ச ஏகராவிலும், ரப்பர் நாலரை லட்சம் ஏகராவிலும், புன்செய் தானியங்கள் ஒரு லட்ச ஏகராவிலும், கொக்கோ 35000 ஏகரா நிலத்திலும், லவங்கப்பட்டை 25000 ஏகராவிலும் புகையிலை 12000 ஏகராவிலும் பயிரிடப்பட்டிருக்கின்றனவாம்.

பயிருணவு பீடிகா விஷயங்கள் 313-ம் பக்கத்தொடர்ச்சி:

PLANT FOOD INTRODUCTION

Continued From Page 313.

இவ் விஷயத்தைக் குறித்துச் சென்ற தடவை எழுதியபோது தாவர அல்லது ஜீவ வர்க்கப் பொருள்களை எரித்தால் புகையாய்ப் போவதில் நான்குவித மூலப் பொருள்க ளிருப்பகாயும், அவைகள் பெரும் பான்மையும் ஆகாயத்திலிருந்தே கிடைக்கிறதென்றும் அக் காரணத்தினாலேயே தாவர ஜீவவர்க்கப் பொருள்களின் உருப்புகளில் கரி முதலிய மேல் சொன்ன நான்கு மூலப் பொருள்கள் ஜாஸ்தியா யிருப்பதாயும் எழுதினோம். அவைகளைக் குறித்து இந்தத் தடவை சற்று கவனிப்போம்.

ஆகாயத்திலிருந்து கிடைக்கும் மூலப் பொருள்கள்.

(a) பிராணவாயு—இது நாம் சுவாசிக்க உட்கொள்ளும் காற்றில் ஐந்தில் ஒரு பாகம் கலந்திருக்கிறதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்த வாயுவுக்கு குறிப்பிடக்கூடிய நாற்றமாவது வர்ணமாவது அல்லது ருசியாவது கிடையாது. இந்த வாயுவுக்கு தானாய் எறியும் குணமும் இல்லையென்றாலும், இந்த வாயுவின் ஏதுவினால் தான் தீ எரிகிறது. இந்தப் பிராணவாயு வில்லையானால் ஒரு பிராணியும் ஜீவிக்க முடியாது. நெருப்பும் எரியாது. இவ் வாயு அனேகமாய் மண்ணிலுள்ள எல்லா சுயம்பு வஸ்துக்களுடனும் கலந்துகொள்ளக்கூடிய சிநேகித பாவமுடையது. ஆகையால் மண்ணில் மற்ற சுயம்பு வஸ்துக்களுடன் கலந்தே யிருக்கும். ஏறக்குறைய சரிபாதி நீர் இவ்வாயுவினாலேயே யுண்டாகிறதென்று சொல்லலாம். இரும்புத்துண்டை காற்றுப் படும்படியான இடத்தில் போட்டு வைத்தால் அவ்வாயு அந்த லோகத்துடன் சேர்ச்சேர அது தீ வேக்காட்டில் எறிந்ததுபோல் எரிந்து துருப் பிடிக்கிறது. அதற்கு இவ் வாயுவே காரண பூதம். அந்த வாயு பிராணிகளின் உருப்புகளோடும் செடிகளின் உருப்புகளோடும் நிதானமாய் ஐக்கியப் படுவதற்குத்தான் மக்குதல் என்று சொல்லுவதுண்டு. மக்குதல் என்றால் நிதானமான வேக்காடு என்று சொல்லவேண்டும்.

செடிகளின் உருப்புகளில் வேர்தான் பிராணவாயுவை கிரகிக்கும் பிரதான அங்கம். நிலத்தில் மண்ணின் அணுக்களுக்கு மத்தியிலிருக்கும் சந்து போன்ற இடங்களில் காற்று ஊடுருவியிருக்கும். செவ்வையாய் உழுது அல்லது கொத்தி செய்நேர்த்தி செய்த நிலங்களில் காற்று ஜாஸ்தி செல்ல ஏதுவுண்டு; ஆகையால்

பிராணவாயுவும் சுலபமாய் சஞ்சரிக்க இடமுண்டு. அதைச் செடிகள் வேர்களின் வழியாய் கிரகிக்கும். இலைத் துளிர்களும், மொக்குகளும் மலரும் காலத்தில் செடிகள் நிலத்திலுள்ள பிராணவாயுவை விசேஷமாய் உள்கொள்ளும். நிலம் மிகவும் கெட்டிப்பட்டு இருகிபிருந்தாலும் அல்லது அதில் ஜலம் வடிந்து போக மார்க்கமில்லாமல் தியங்கினாலும் பயிர்கள் செளிக்காது. இதற்கு முக்கிய காரணம் என்னவென்றால் செடிகளின் வேர்களுக்கு பிராணவாயு போதுமான அளவு கிடைக்காமலிருப்பதினால் தான். ஆகவே உலகத்தின் கண்ணுள்ள தாவர ஜீவ வர்க்கப் பொருள்களின் வளர்ச்சிக்கும் அவைகளின் நாசத்திற்கும் இவ்வாயுவே காரணமாயிருக்கிறது.

(b) ஜலவாயு.— இவ் வாயுவுக்குப் பிராணவாயுவைப்போல் வர்ணமாவது ருசியாவது அல்லது நாற்றமாவது இல்லை. இது எல்லா வாயுக்களைவிட *மெத்த லேசான வஸ்து; இதுபிராணவாயுவுடன் கலக்கும்போது ஜலம் உண்டாகும் காரணத்தால் இதற்கு ஜல வாயுவென்று பெயர். இது இயற்கையில் மற்ற வாயுக்களுடன் கலக்காமல் சுயம்பாயிருப்பதில்லை. இத்துடன் பிராணவாயு சம்பந்தப்படும்பொழுது ஜுவாலை யுண்டாகும். அப்போது அதனால் தண்ணீர் உற்பத்தியாகும். மண்ணிலும் பயிர்களிலும் இவ் வாயு மற்ற வஸ்துக்களுடன் கலந்தே யிருக்கிறது. செடிகளின் வழியாய் அவைகள் உட்கொள்ளும் வேரின் தண்ணீரினின்றே பயிர்களின் வளர்ச்சிக்கு வேண்டிய ஜலவாயு கிடைக்கிறது. ஜலமோ மழை ரூபமாயும், பனி நீராகவும் இப்படி அனேக விதங்களில் ஆகாயத்தினின்று பயிர்களுக்குக் கிடைக்கிறது.

---

* மெழுகு பட்டுத் துணியில் பெறிய பை தைத்து அதை வாய் கீழ்புறமாகக் கவிழ்த்து ஜலவாயுவை அந்த பைக்குள் அடைத்தால் அப்பை திரண்டு விம்மி மேலே எழும்பப்பிரயத்தனம் செய்யும். தண்ணீரில் மிதக்கும் ஒரு கட்டைத் துண்டை ஒருவன் ஜலத்தின் அடி வலரயில் நன்றாய் அமிழ்த்து விட்டுவிட்டால் அக் கட்டைத் துண்டு ஜலத்தினுள்ளிருந்து எப்படி விசையுடன் மேல்புறம் எழும்புமோ அப் பிரகாரம் பைக்குள் ஜலவாயு அடைபட்டவுடனே விசையோடு எழும்பும். இம்மாதிரி கூண்டு செய்துதான் ஆகாய மார்க்கமாய் கூண்டுகளில் ஜனங்கள் போகிறார்கள். எண்ணை, சர்க்கரை, மாவு நிலக்கரி முதலிய வஸ்துக்களில் இந்த ஜலவாயு ஒரு முக்கிய ....

(c) கரிமூலம்:—ஆகாய மண்டலத்தில் கலந்திருக்கும் வாயுவில் கரிமூல வாயு 250 பாகத்தில் ஒரு பாகம்தான் கலந்திருக்கிறது. என்றாலும் இது விவசாயத்திற்கு முக்கிய உபகாரியா யிருக்கிறது. இது காற்றைவிட கனமானது. இக்காற்றில் ஒரு எரியும் மெழுகு வத்தியைச் செலுத்தினால் அது உடனே அவிந்துபோகும். இந்த வாயு கரிமூலமும் பிராண வாயுவும் சேர்ந்த ஒரு கலப்பு வஸ்து. இது தண்ணீரில் சுலபமாய்க் கலந்து கரையக்கூடிய குண முடையது. ஒரு விளக்கு எறியும்போது பக்கத்திலுள்ள வஸ்துக்களில் கரிப் பிடிக்கிறதை நாம் பார்க்கிறோம். இப்படிப் படிந்த வஸ்துவுக்குத்தான் கரி மூலம் என்று பெயர். அடுப்புக்கரி, நிலக்கரி, முதலிய பொருட்களில் இவ்வஸ்து அதிகமாயிருக்கிறது. இந்தக்கரி பிராணவாயுவுடன் சம்மந்தப்படுவதால் அக்கினி யுண்டாகும். அப்போது கரியமல வாயு உண்டாகும். இவ்வாயு பயிர்வர்க்கங்களுக்கு மிகவும் உபயோகமுள்ளது. பிராணி வர்க்கங்கள் இதை உட்கொண்டால் க்ஷீணிதமடையும். நாம் வெளியில் விடும் மூச்சில் முக்கியமாய் நீராவியும் கரிய மல வாயுவுமாக இரண்டு வஸ்துக்களிருக்கின்றன. கண்ணாடியின் பேரில் மூச்சு விட்டால் மூச்சிலுள்ள நீராவி ஜலமாகி கண்ணாடியைச் சற்று மங்கச் செய்வது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். குளிர் காலங்களில் நாம் வெளிவிடும் மூச்சிலுள்ள நீராவி குளிரினால் சற்று உறைந்து புகைபோல கண்ணுக்குப் புலப்படும். ஆனால் நாம் வெளிவிடும் சுவாசத்திலிருக்கும் கரிய மலவாயு கண்ணுக்குப் புலப்படாது: ஆனால் நாம் வெளிவிடும் மூச்சில் கரியமலவாயு இருப்பதை ஒருவித பரீட்சையால் கண்டுகொள்ளலாம். புதுச் சுண்ணாம்புத்தெளிவு ஜலத்தை ஒரு பாத்திரத்தில் இருத்தி, ஒரு ஊதாங்குழலின் ஒரு நுனியை அந்தத் தண்ணீரில் அமிழ்த்தி, அந்தக் குழலின் மற்ற நுனியை வாயில் வைத்து ஊதினால் தெளிவாயிருந்த சுண்ணாம்பு ஜலம் பால்போல வெண்மை நிறமாகமாறும். வாயிலிருந்து வெளிப்பட்ட மூச்சிலிருந்த கரிய மலவாயு ஜலத்தில் கரைந்திருந்த சுண்ணாம்புடன் ஐக்யப்பட்டு, ஜலத்தில் கரையக்கூடாத சுண்ணாம்பாய் மாறினதினால் வெண்மை நிறமாய் விட்டது. இப்படி வெண்மை நிறமாய் மாறின தண்ணீரில் சற்று நேரத்திற்கெல்லாம் தண்ணீரில் கரையக்கூடாத அணுக்கள் கீழ் வண்டல்போல படியும். அப்படிப் படிந்த சுண்ணாம்பு சீமைச் சுண்ணாம்பு போலிருக்கும். அந்த ஜலத்தை இன்னும் சில நேரம் அந்த ஊதாங்குழல் கொண்டு ஊதி

னுல்கமது வாயிலிருந்து வெளிப்படும்கரியமலவாயு ஜலத்துடன் கரைந்து தண்ணீரில் படிந்த சீமைச் சுண்ணும்பைக் கொஞ்சம் கறையச் செய்யும். சீமைச் சுண்ணும்பு சாதாரண சுத்த ஜலத்தில் சற்றும் கறையாது.

காற்று சாதாரணமாய் உள்ளிருந்து வெளியே வரவும் வெளியிலிருந்து உள்ளே செல்லவும் மார்க்கமில்லாத ஒரு அரையில், ஜாஸ்தி ஜனங்கள் தூங்கினுலும் அடைபட்டிருந்தாலும், பிராணிகளின் பிராணனுக்கு முக்கிய ஆதாரமான பிராணவாயு அவ்வரையில் போதுமான அளவு இல்லாமல் போய் சுவாசிக்கும்போது இரத்தத்துக்குள் பிரவேசித்து அந்த அறையிலிருப்பவர்களின் உடலிலுள்ள கரியுடன் ஐக்கியமாகி கரியமலவாயுவாய் மாரி, அந்த அரையிலிருக்கும் ஜனங்கள் வெளிவிடும் மூச்சால் அந்த அறைக்குள் பரவும். ஜீவாதாரமான பிராணவாயு அரைக்குள் போதுமான அளவு இல்லாமல் போவதாலும் விஷத் தன்மையுள்ள கரிய மலவாயு அரைக்குள் அளவுக்கு மிஞ்சுவதாலும் அங்குள்ள ஜனங்களுக்குத் திட்டுமுட்டுண்டாகி கடைசியில் மரணம் சம்பவிக்கும்.

ஆகாயத்திலுள்ள பிராணவாயுவை சகல ஜீவராசிகளும் உட்கொள்ளுகிறதென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். அவ்வாயு உடல்களுக்குள்ளுள்ள கரியணுக்களுடன் ஐக்கியப்பட்டு கரியமலவாயுவாகி சுவாசத்தை வெளிவிடும்போது வெளிப்படுகிறது. ஆகாயத்திலுள்ள பிராணவாயு வெல்லாம் மேல்சொன்ன பிரகாரம் ஆகிக்கொண்டிருந்தால் கொஞ்சக் காலத்துக்குள் பிராணிகளால் வெளிவிடப்படும் கரியமலவாயு சமஸ்த ஜீவராசிகளையும் கொன்று போடஹேதுவாகும். ஆகையால் பிராணவாயு மறுபடியும் ஆகாயத்தில்சேரும்படியான ஏற்பாட்டை இயற்கையிலேயே ஈஸ்வரன் ஏற்பாடு செய்திருக்கிறுர் எப்படி பிராணவாயுவை பிராணிகள் உட்கொண்டு கரியமலவாயுவை வெளிமூச்சில் விடும்படி கடவுள் அமைத்திருக்கிறுரோ அதே பிரகாரம் பிராணிகளுக்கு விஷத் தன்மையாகிய கரியமலவாயுவை சகல செடிகளும் தங்கள் இலைகளின் அடிப்புரத்திலுள்ள சூட்சமமான வாய்போன்ற துவாரங்களின் வழியாய் உட்கொண்டு கரியமவாயுவில் உள்ள கரியமலம் என்னும் கரிப் பதார்த்தத்தைப் பிரித்து செடிகளுக்குள் நிருத்திக்கொண்டு பிராணவாயுவை வெளியில் விடும்படி கடவுள் ஏற்பாடு செய்திருக்கிறுர். ஆகவே ஜீவராசிகள் பிழைத்திருக்க தாவரராசிகள் ஆதாரமாயும், தாவரவர்க்கங்கள் பிழைத்

திருக்க ஜீவராசிகள் ஆதாரமாயு மிருகின்றன, செடிகளின் இலைகளிலிருக்கும் கரியமலவாயு, பிராணவாயுவாயும் கரியாயும் பிரிக்கப்படுவதற்கு இரண்டு அம்சங்கள் முக்கியமாய் தேவை. அவைகள் சூரியவெளிச்சமும், இலைப்பசுமையும்(Chlorophyl). ஆகையால் ராத்திரி காலத்தில் செடிகள் பிராணிகளைப் போலவே பிராணவாயுவை உட்கொண்டு கரியமலவாயுவை வெளியில் விடுகின்றன. நிழலில் செடிகள் செழிக்காததற்கு முக்கியகாரணம் சூரியவெளிச்சக் குறைவுதான். செய்கால் நிலத்தில் மண் அணுக்களுக்கு இடையில் கரியமலவாயு இருப்பதால் அந்த வாயு ஜலத்துடன் கரைந்து வேரின் வழியாய் செடிக்குள் சிறிதுபாகம்வரை செல்லும். இலைக்கண்களில் கரியமலவாயுவிலிருந்து பிரிக்கப்பட்ட கரியணுக்கள் இலைகளில் உள்ள ஈரத்தொடு அதாவது பிராண வாயுவும் ஜலவாயுவும் ஐக்கியப்பட்ட நீருடன் உடனே ஐக்கியப்பட்டு, சர்க்கரை, மாவு, நார், தைலம் அல்லது கொழுப்பு, பிசின், முதலாகிய பதார்த்தங்களாகி, செடியின் உருப்புகளுக்குள் பரவி அதைப் போஷிக்கவும் செய்விக்கிறது. வெவ்வேறுவஸ்துக்களாய் மாரும், கரி, பிராணவாயு, ஜலவாயு வெவ்வேறு அளவாய் ஐக்கியப்படுவதால் வெவ்வேறு பதார்த்தங்கள் உண்டாகின்றன.

நைட்ரஜன் என்னும் உப்புவாயு—இவ்வாயு மற்ற வஸ்துக்களுடன் இயற்கையில் சுயம்புவாயிருக்கிறது. நமது உடம்பில் வீசும் காற்றில இது 4 மடங்கு இருக்கிறதாக கணக்கிடப்பட்டிருக்கிறது. பிராண வாயுவைப்போல் இதற்குததானுப் எரியும் குணமில்லை. நாற்றமாவது, வர்ணமாவது அல்லது ருசியாவது இதற்குக்கிடையாது, இந்தக் காற்றுக்குள் எரியும் மெழுகுவத்தியை விட்டால் உடனே அணைந்துபோகும். ஒரு பிராணியை இக்காற்று நிறைந்த புட்டிக்குள் விட்டால் அது சுவாசிக்க வழியில்லாமல் இறந்துபோகும். இவ்வாயு ஆகாயத்தில் ஜாஸ்திபாகம் பரவியிரா விட்டால் பிராண வாயுவின் கொடுமை அதிகரித்து விடுமென்று கடவுள் இவ்வாறு அமைத்திருகிறார். இந்த வாயு மற்ற வஸ்துக்களுடன் கலக்கும்போது இதன் உபயோகம் பயிர் வகைகளுக்கு அதிகம் உண்டாகிறது. உப்புவாயு சம்மந்தப்பட்டவஸ்து இல்லையானல் ஜீவன் நிலைக்க இடமிராது. உப்புவாயு சம்மந்தமான வஸ்துக்களில் அக்கினித்திராவகமும் ஒன்று. அம்மோனியா வென்னும் வாயுவும் இது சம்பந்தப் பட்டவாயுவுதான், சராசரப் பொருட்களில் ஏதாவது நிலத்தில் விழுந்து அழுகிப்

போகும் போது அம்மோனியா வாயு உண்டாகும். குதிரை லாயங்களில் வீசும் கடும் நாற்றம் அம்மோனியாவால் உண்டானதுதான். நைட்ராஜன் சம்மந்தப்பட்ட வஸ்துக்களில் அனேகம் நமக்கு உபகாரப்படும் உண்வுப் பொருள்கள். நைட்டிராஜின் என்னும் வஸ்து எல்லாப் பயிருணவு பதார்த்தங்களிலும் மிகச்சிறந்தது. இந்த வாயு வாயு மண்டலத்தில் அனேகமாய் 100-க்கு 80 பங்கு இருந்த போதிலும் பயிர்கள் போஷாப்புக்கு பிரயோஜனப்படும் ஸ்திதியில் இல்லை இது பிராணவாயுவுடனும் ஜலவாயுவுடனும் ஐக்கியப்பட்டு அக்கினித் திராவகமாகி சுண்ணும்பு, போட்டாஷ் முதலிய பதார்த்தங்களோடு ஐக்கியப் பட்டாலொழிய செடிகள் வேர்களின் மூலியமாய் கிரகிக்க முடியாது.

(இன்னும் வரும்)

Cattle Section
Local Treatment.

கால்நடைப் பகுதி
கழுத்துப்புண் சிகிச்சை

கமலையடி யதிகத்தாலும் பாரவண்டியில் நிதானமாய் ஏற்ருததாலும் உழவில் நுகத்தடி கயற் இருக்கி பூட்டாததாலும். மாடுகள் கழுத்து வீங்கிகட்டி யுண்டாகி வேலைசெய்யக் கூடாததாக விருக்கும். மருந்து போட்டாலுங் குணமாவதில்லை. மாட்டு விலை குறைந்து விலைப்போகும். சில மாடுகள் குணமாகியும் சிலமாடுகள் குணமாகாமலும் மாடுவாங்கினவர் கஸ்டப்படுகிருர். குணமான மாட்டு முறையை விசாரித்ததில் பின் வருஞ்சிகிச்சை செய்து குணமானதாகத் தெரிகிறது. அதையாரு மனுஸ்டிகக வேண்டிய தவசியம். அனுசரித்தோர் அபிப்பிருயங் கிருஷிகனி லரிவிப்பது மற்றையோருந் தைரியமா யனுஷ்டிக்க தைரிய முண்டாகும்.

கழுத்து புண்கட்டியை அருத்து ஜலந் தேங்காமல் செய்ய வேண்டும். பின் *முள்ளு முருக்கிலையும் தாமபூலந் தரிக்குஞ் சுண்ணும்பும் மைபோலரைத்து புண்ணில் வைக்கவும 3-வாரததில குணமாய் விடுது. மேலே குரிதத மருந்துவைத்து வரவே புண் நீர்வற்றிவருவதும் புண்சுருங்குவதும் அத்யாசூரியமாய்க்காணலாம். தினம் 2தரம் மருந்து போடவேண்டும்.

---

*இதை கல்யாண முருங்கை என்று வழங்குவதுண்டு பூ சிகப்பாயும் அழகாயுமிருக்கும பூவாச னைகிடையா.

கால் நடைகளுக்கு மேலெல்லாம் தடிப்பும் இருமல் வயற்றளைச்சலுக்கு சிகிச்சை

துளசி, தைவேளை- பெருந்தும்பை வேம்பு இவைகளின் சாறு வகைக்கி *2-அவுன்சு எடுத்தும் அரை அவுன்சு வெள்ளைப்பூடும் பெருங்காயமும் சேர்த்து அரைத்து 4 மணிக்கொருதபா குடுக்கவும்.

வயற்றுளைச்சலில்லா விட்டால் சம்பை தள்ளி சிவதைவேர் ஜாலப் உப்பு நல்லெண்ணை 4 அவுன்சும் சேர்க்கவும்.

ஜலமண்டலி முதலிய விஷப்பாம்பு கடிக்கு சிகிச்சை

‡பெருந்தும்பைசார் 4 அவுன்சும் வாழை மடல் சார் 4 அவுன்சும் எடுத்து கலந்து குடிக்க குணமாகுமாம். விசமும் தரத்துக்குதக்கபடி 1 மணி 2 மணிக்கோர்தபா குடுப்பதை சந்தர்ப்பம் போல் அனுசரிக்க வேண்டுமாம்.

பால் மாடுமுலைக்காம்பு புண் சிகிச்சை

சறவை மாடுகளுக்கு முலைக்காம்பில் புண்வெடிப்பு நேரிடின் படிக்கார முனைத்துப் போடும்படி ஆங்கில வைத்ய சித்தாந்தம். படிக்காரம் போடுவது பால்வற்றி விடுது. மாயக்காய் கடுக்காயுரைத்துப் போட புண்குணமாய் விடுது. கெடுதி யில்லை. வெந்நீர் 1 பாத்திரத்தில் வைத்து வெந்நீருவி முலைக்காம்பில் படும்படி செய்தால் புண்சலிசாய் ஆறுது.

நமது நிருப நேயர் விவசாயத்தில் அதிக ஊக்கமெடுத்து சீர்திருத்தங்கள் செய்வதில் அதிக அக்கரை யெடுத்துக் கொள்பவர்களாதலால், நமது சந்தா நேயர்கள் அவர்கள் அனுபவத்தை யொட்டிச் சொல்லிய முறைகளைக் கையாடிப்பார்த்து அவரவர் அனுபவங்களைத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்

அதைப் போலவே அவரவர்களுக்குத் தெரிந்த சுலபமானதும் உபகாரமுமானது மான சிகிச்சைகளை "கிருஷிகன்" வாயிலாக வெளியிடுவார்களானால் எல்லாருக்கும் பேருபகாரமாகும். ப. ர்.

---

*பட்டணம் படியில் 32ல் 1 பங்காகும்

†அவுன்சு 2 அரை ரூபாயிடை யிருக்கும்.

‡ பெருந்தும்பை யென்பது சில ஜில்லாக்களில் எருமுட்டைபீ நாரி என்று வழங்கும் செடி. இது சுமார் 3 அடி வரை வளரும் குழந்தைகள் மாந்தத்திற்கு நாட்டு வைத்தியர்கள் உபயோகிப்பதுண்டு. அதுவா அல்லது விநாயகர் பூஜைக்கு உபயோகிக்கும் புஷ்பங்களுடைய தும்பைச்செடியில் பெரிய தினுசு செடியா யென்றும் தெரிவித்தல் நலம். ப. ர்.

Points to be observed in raising Nursery and planting in single planting of Paddy.

நெல் நாத்தங்காலில் விதையைக்குறைந்து விடுவதைப் பற்றியும் பிறகு பயிரை சிக்கனமாக நடுவதைப் பற்றியும் குடியானவர்கள் அறிந்து கொள்ள வேண்டிய சில முக்கியமானகுறிப்புகள்.

குடியானவர்கள் நாத்தங்காலில் விதையை ஏராளமாக விதைத்து வீணாகவிதைப் பண்டத்தை சிலவு செய்து விடுகிறார்கள். அப்படி விதையை ஜாஸ்தியாக விதைப்பதால் நாத்துகள் நீத்துப்போய் வலிவுடையதாக வருவதில்லை. அந்த நாத்துகளைப்பிடுங்கி பிடிப்பிடியாக 6, 8, 10 நாத்து நட்டு வருகிறார்கள். அப்படிச் செய்யாமல் நாத்தங்காலில் கொளுஞ்சிதழை முதலிய பசுந்தாள் உரம்சேர்த்து விதையை ரொம்பவும் பொளக்கமாக விதைக்க வேண்டும். அதாவது ஒரு செண்டு நாத்தங்காலில் ஒரு பட்டணம் படிவிதையைத் தெளிக்க வேண்டும்; அப்படி ஏழுபட்டணம் படிவிதை ஏழுசெண்டில் தெளித்தால் ஒரு ஏகார நிலம் நட்டுவரும். சாதாரணமாய் குடியானவர்கள் ஒரு பட்டணம் படிவிதைக்கக் கூடிய நாத்தங்காலில் 2 வள்ளம் 2½ வள்ளம் விதைவிதைத்து வருகிறார்கள். அதாவது ஒரு பங்குக்கு 4 பங்கு அல்லது 5 பங்கு வீதம் விதைத்து அனாவசியமாய் விதையை நஷ்டம் செய்து கொள்ளுகிறார்கள். முன் சொன்னபடி பொளக்கமாக நாற்றுவிட்டு வருவதால் நாத்துகள் துவக்கத்திலிருந்தே கருகருத்து நேர்த்தியாக வளர்ந்து நாக்கங்காலிலேயே பயிருக்கு மூன்று கிளைகள் நான்கு கிளைகள் விட்டு அதிகவீரியமாய் வளர்ந்து வருகிறது இப்பேர்ப்பட்ட நாத்துகளை நன்றாக எருவு அடித்த வயலில் பிடுங்கி நடும்போது ஒரு அலகு அல்லது இரண்டு அலகு வீதம் நட்டு வந்தால் போதுமானது. இப்படி நடப்பட்ட பயிரானது ஆரம்பத்திலிருந்தே நன்றாக கருகருக்கு வளரும். நன்றாக கிளைக்கும். ஒரு தூருக்கு 30, 40, 50 கிளைகள் பூமி வளத்திற்குத் தருந்தாற்போல காணலாம். விளைவில் பில்லும் ராசியும் பிடிப்பிடியாய் நட்டதைக் காட்டிலும் ஜாஸ்திவிளைவு காண்கிறது. இப்படிப் பயிர் செய்தால் விதைச் சிலவிலும் அதிகலாபம் கிடைக்கின்றது.

கோபால செட்டி

ராஜப்பிரதிநிதி குடியிருந்து வரக்கட்டிடம் 125 லக்ஷம், பிரதமசேனாதிபதி சிப்பந்திகள் 5 லக்ஷம், செக்ரட்டேரியட் 175 லக்ஷம், டில்லி சட்டசபை ராஜாங்கசபை, மன்னர்சபை, 75 லக்ஷம், இந்திய அரசாங்க அதிகாரிகள் விடுதிகள் 3 லக்ஷம் பெரிய ஆபீசர்களின் பங்களாக்கள் 55 லக்ஷம் குமஸ்தாக்களின் விடுதிகள் 65 லக்ஷம் சுகாதார வசதிகள் 125, லக்ஷம் மின்சாரம் 57 லக்ஷம் நீர்ப்பாசனம் 33 லக்ஷம் ஓபக்கிரம் 90 லக்ஷம் நந்தவனம் பகுதி 50 லக்ஷம் செலவுசெய்து புதுடெல்லி ஏற்படுத்தப்பட்டது.

Correspondence.

கடிதம்.

ஐயா!

நான் தங்களை தொந்தரவு செய்வதற்கு மன்னிக்கவும். கீழ்கண்டவைகளுக்கு உடனேபதில் தெரிவிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். தங்கள் பத்திரிகையில் டைரக்டர் துரை ஒரு ஏக்கருக்கு 14 படி விதைபோதும் என்று சொல்வதாக வாசித்தேன். சம்பா நாத்து நாத்தங்காலில் 5-7 வாரம் இருக்கிறது. கார் குருவை இவைகள் 20-30 நாள்தான் நாத்தங்காலில் இருக்கிறது. 20-30ம் நாள் பறித்துவயலில் நடப்படுகிறது. 14படி கார்விரைத்தால் 20-30 நாளில் பிடுங்க 14படியை எத்தனை செண்டில் விடலாம்? செய் நேர்த்தி என்ன செய்யலாம்? ஆனி மாதத்தில் வயலுக்கு உபயோகிக்க இப்போதே கடலைப் புண்ணுக்கு வாங்கி வைக்கலாமா? இப்போதே ஸ்டாக் செய்தால் வீரியம் போய்விடும் என்கிறார்களே! அதுஉண்மையா? இப்போது சகாயமாயிருப்பதால் வாங்கி தூள் செய்து வைக்கலாமா? தங்கள் ஆலோசனை யாது? மீன் எரு இப்போதே ஸ்டாக் செய்யலாமா? ஆனிமாதம் வரை கெடாமல் இருக்குமா? ஏக்கருக்கு எத்தனை அந்தர் மீன் எரு உபயோகப்படுத்த வேண்டும்? மீன் எரு மாத்திரம் போதுமா? புண்ணுக்கும் நைட்ரேட் ஆப்பொட்டாஷ வேண்டுமா? மீன் எருவில் நைட்ரஜன் பாஸ்பரஸ் பொட்டாஷ் 100-க்கு எத்தனை பாகமிருக்கிறது? இதை தாங்கள் கெமிஸ்ட்ரியில் படித்திருக்கலாம்; தயவு செய்து மன்னிக்கவும்.

கும்பகோணம். கே. வி. ராமநாத ஐயர்,

பதில்

வெகு ஜாக்கிரதை யுடன் நன்றாய் எருச் செய்து, செண்டில் 1 பட்டணம் படி வீதம் நாத்துப்பாவி ஒவ்வொரு முதலாய் நட்டால் ஏக்கருக்கு 2-அல்லது 3-பட்டணம்படி விதை கூடபோதும். நாம் திருநெல்வேலியில் இம்மாதிரி சம்பாவில் செய்து பலனடைந்திருக்கிறோம். 14 பட்டணம் படி விதை 10 முதல் 14 செண்டு நிலத்தில் பாவி நாத்துக்களை சிறுகவைத்து நட்டால் போதும். ஆனால் குருவையின் வயசு கொஞ்சமாகையாலும் கிளைத்துப் பயிராக ஜாஸ்தி வயசில்லையானதாலும் அதற்கு இப்போது கிருஷிகர் விடுவதில் பாதிவிதை தாராளமாய்ப் போது மென்பது எமது துணிவு. நாத்தங்காலில் நாத்து வீரியமாய் வளரவேண்டு மென்றால் சீக்கிரம் நாத்துக்கு உபயோகப் படக்கூடிய எருவிடவேண்டும். ஆட்டுச்சாணி இச்சக்தியுடையது. ஸல்பேட் ஆப் அம்மோனியாவும் இச் சக்தியுடையது. ஆனால் பின் சொன்னதற்கு தண்ணீர் தட்டானால் தீய்ந்துபோக இடமுண்டு.

கடலைப்புண்ணாக்கின்வீரியம் ஸ்டாக்செய்ததினால் கெட்டுப்போகமாட்டாது. சகாயமாய் விற்கும்போது வாங்கி வைத்துக்கொள்ளலாம்.

கப்பலில் ஏற்றிப்போய் இரண்டு மூன்று மாதங்களுக்குப்பின் மேல் நாட்டாருக்கு உபயோகப் படுமானல் நமக்கு ஏன் உபயோகப்படாது என்பதை சற்று யோசித்துப் பார்க்கவும்.

மீன் எருவில் இரண்டுவித முண்டு அதாவது மீன் அப்படியே காயவைத்து தூள் செய்தது. இரண்டாவது அதிலிருக்கும் எண்ணெயைப்பிழிந்து எடுத்துக்கொண்டபின் இருக்கும் மீன் சக்கை அல்லது மீன் புண்ணாக்கு எரு என்பது. முதலில் சொன்னது மீன் எரு; இரண்டாவதற்கு மீன் குவானே என்று பெயர் வழங்கும். இதுவும் இப்போதே வாங்கி வைக்கலாம். இப்போதே வாங்கிவைத்தால் கெட்டுப் போகாது; எரு விற்கும் கம்பெனிகள் வருஷக் கணக்காய் வைத்திருக்கிறதுண்டு.

100ராத்தல்

	மீன் எருவில்	மீன் புண்ணாக்கில்
இந்திரிய வஸ்து	36-முதல் 58	67-பாகம்
நைட்ரஜின்	4-முதல் 9-வரை	8-முதல் 9-வரை
பிரகாசிதம்	4-முதல் 5-வரை	8-முதல் 9-வரை
சாம்பல்காரம்	அனேகமாய் அரை முதல் முக்கால்	அரை முதல் முக்கால்

இத்துடன் சுண்ணாம்பு சத்துமிருக்கிறது.

தனி மீன்புண்ணாக்கு (குவானே) கிருஷ்ணா கோதாவரி ஜில்லாக்களில் 3அந்தர் வரைஉபயோகித்து பலனடைந்திருக்கிறார்கள். தென் ஆற்காடு முதலிய இடங்களில் பசுந்தாள் பயிருடன் 2 அந்தர் வரை உபயோகித்து லாபமடைந்திருக்கிறார்கள். தஞ்சாவூர் ஜில்லா மங்கநல்லூரில் 2-முதல் 3-அந்தர்வரை உபயோகித்து லாபமடைந்திருக்கிறார்கள். மீன்உரம் 4-அந்தர்வரை உபயோகிக்கலாம். தனியாய் உபயோகப் படுத்தினதிலும் பலன் கொடுத்திருக்கிறது.

மீன் எரு உபயோகித்ததில் அதன்பலன் நிலத்தில் இரண்டு மூன்று வருஷங்களாகும் வரை இருப்பதாகவும் தெரிகிறது.மீன் எரு சிலாக்கியமானதே.

ப. ர்.

ஐயா,

ராமசந்திர இயற்றம் எவ்விடம்இருக்கிறது? மதராசில் உண்டா சங்கதி தெரிவிக்கவும். கிருஷிகன் பத்திரிகை 317 நெம்பர் பக்கத்தில் கண்ட 2சால் கமலைகையால் சுற்றும் ஏற்றம் எவ்விடம் இருக்கிறது? அதன் விலை என்ன? சங்கதி தெரிவிக்க வேணுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். தங்களுக்குக் கொடுக்கும் சிரமத்திற்கு மன்னிக்கவும்.

S. V. R. ஐயர். உக்கிரம்

பதில்

இராம சந்திர ஏற்றம் அதாவது கவலை மைலாபூரில் ம-ா-ா-ஸ்ரீ S ராமசந்திர ஐயர் அவர்களிடம் கிடைக்கும். அவர்களுக்கு ம-ா-ா-ஸ்ரீ சென்டிரல் அர்பன் பாங்கிலிருக்கும் காரியதரிசி ம-ா-ா-ஸ்ரீ சி. வி: ரெங்கசாமி அவர்கள் மேல்பார்த்துக் கொடுப்ப தென்றால் கடிதம் சேரும். 2சால் சுற்றும் கவலையின் விலைவிபரம், திருநெல்வேலி ஜில்லா தென்காசித்தாலுக்கா இலும் வெள்ளைகால் கிராமத்தில் ம-ா-ா-ஸ்ரீ வி.பி திருமலையப்ப முதலியார் அவர்களிடம் விசாரித்தால் கிடைக்குமிடம் விலை முதலியவைகளைக் குறித்துத்தெரிவிப்பார்கள். "கிருஷிகன்" 9-ம வால்யம் 11 ம் நெம்பரில் 322ம் பக்கத்தில் ம-ா:ா-ஸ்ரீ திருமலையப்பமுதலியார் அவர்களின் வியாசத்தின் முடிவில் எங்கு கிடைக்குமென்று எழுதியிருக்கிறதைப் பார்க்கும்படிகேட்டுக் கொள்ளுகிறோம்

(ப-ர்)

ஐயா,

ராமசந்திர ஏற்றத்தின் உருவப் படமும் 15 அடி 20 அடி ஆழமுள்ள கிணறுகளுக்கு ஷை ஏற்றம் அமைக்க கிரயம் எவ்வளவு? மராமத்துகள் அடிக்கடி உண்டாகுமா? மராமத்துகள் அவ்வவ் விடங்களிலேயே ஏற்பட்டகருமானைக் கொண்டுசெய்துகொள்ளமுடியுமா? ஓர்தடவைக்கு எத்தனைகாலன் தண்ணீர் மேலேவரும். மாடுகஷ்டப் படாமல் இறைக்குமா; ஷை ஏற்றம் பெற்றுக் கொள்ள விரும்புவோர் எந்தவிலாசத்திற்கு எழுதவேண்டும் என்றசகல விபரங்களுக்கும் பதில் ஆவலோடு எதிர்பார்த் திருக்கிறேன். ஆச்சிரமத்திற்கு நேரில் வந்துபார்க்கச் சிலவு அதிகம்பிடிக்கும்:

கிருஷிகன் பத்திரிக்கை 7-ம் பிரதி 219-ம் பக்கத்தில் (பாங்குநெல்) மத்தியமாகாணங்களிலிருந்து வரவழைத்துப் பயிரிடவேண்டுமென்றும் அது இவ்விடத்தில் இல்லை யென்றும் தெரிகிறதினுலும், அந்த நெல்லைப்பற்றி அடியேன் பொருட்டு கஷ்டத்தைப் பாராட்டாமல் தங்கள் மூலமாக வரவழைத்து அடியேன் விலாசத்திற்குவந்து சேரும்படி அனுப்பினுல் அனேக ஏழைஜனங்களை முன்னேற்றமடையச்செய்த உபகாரமாகும். செய்யாமல் செய்தஉதவியின் பலனும் பகவான் கிருபையு முண்டாகும். இதன்சிலவுக்காக ரூ 10 பத்துரூபாய் அனுப்பி யிருக்கிறேன். இரண்டு ஏக்கர் அல்லது ஒரு ஏக்கர் நிலத்திற்காவது பயிரிடவேண்டிய அழவுவிதை நெல் வரவழைத்து அனுப்பக் கோருகிறேன். சிலவுக்கு ரூபாய் போதாதென்றுலும் இன்னும் வேண்டிய ரூ நிருபம் பார்த்து அனுப்புகிறேன்.

பாங்கு நெல்சாகுபடி செய்யவேண்டிய முழுவிபரங்களும் தெழிவாய்த் தெரியப்படுத்தக் கோருகிறேன்.

S. நாராணசாமி ரேட்டி, கி. மு
வேம்பார்பட்டிகிராமம்

பதில்

ராமச்சந்திர ஏற்றத்தைப் பற்றி சொந்தக் காரருக்கு எழுதியிருக்கிறோம். தக்கபதில் கிடைத்தவுடன் தெரிவிக்கிறோம்.

பாங்கு நெல் இவ்விராஜதானியிலேயே சில இடங்களில் சாதாரண நெல்லைப்போல் அதிகஜலம் பாய்ச்சியே பயிரிடப்படுகிறது. நாம் கேழ்வரகுக்குத் தண்ணீர் இறைப்பது போல் இறைத்து பயிர் செய்து தக்க இலாபம் அடைந்திருக்கிறோம். தற்காலம் இங்கு அகப்படக்கூடிய விதையை வாங்கி அவ்வாறு பழக்கம் செய்தால் முதலில் மாகூல் குறைவாய்க்காணும். 2-3 வருஷங்களில் சரியாய்விடும். தங்களுக்கு இவ்விதை வேண்டுமா? அல்லது மத்தியமாகாணத்தி லிருந்துதான் வரவழைத்துக் கொடுக்க வேண்டுமா? தெரியப்படுத்தினால் அவ்வாறு செய்கிறோம்.

3. பாங்குநெல் சாகுபடியைப் பற்றியமுழு விவரம் பின்னால் விபரமாய் எழுதப்படும். ப. ர்.

அன்புள்ள ஐயா!

இங்கு தனித்த கம்பவுண்டும், மேட்டுப்பாங்கும், வடிகால்வசதியை யுண்டுபண்ணிக் கொள்ளக் கூடியதும், எப்பொழுதும் ஓணியால் கால்வாய் ஜல மிறைக்கப்பட்டுப் பாயக்கூடியதும், தண்ணீர்த் தட்டாயின் கிணற்றுச் சலத்தைப் பாய்ச்சிக்கொள்ள யோக்கியமானதும், சற்றுக் களர் சம்பந்த முள்ளதும், இந்திரிய வஸ்துக்கள் சரியான முறையில் அமைந்த தல்லவென ஊகிக்கக் கூடியதும், இதற்கு முன் நெல் முதலான சாகுபடி செய்யப்பட்டு வந்ததும் 60 செண்டு நஞ்சையா யமைந்ததுமாய் எனது நிலம் சொற்பவிஸ்தீரணமாயிருத் தலின் (தீனிக்குதவும்) கரும்பை, இவடத்தில் கரும்பு விதைகிடைக்குங்காலமாகிய ஆனிப்பட்டத்தில்,நவீன முறையிற்சாகுபடி செய்யவெண்ணி; "கரும்பு" என்னும் புத்தகத்தையும், "கிருஷிகன்" 3 முதல் 9 வாலயங்களையும் பார்வையிடலானேன். ஆயினும் கரும்பிறகென்று தங்களுடைய தனிவியாஸம் இது வரையமையப் பெறாததால் சில ஐயமுள. அதாவது:—

I எரு விடுதலில்

1. கரும்பு புத்தகம் குறுணிக்கு 2300 ஆடு வரைகட்டச் சொல்லுகிறது. ஆனால் இவடத்தில் குறுணிககு 800 ஆடுகள்தான் அமையும்போல்த் தோற்றுகிறது. இதும்பாதுமா? போதாதாயின் வேறு எவ்வெருவால? எப்படி? எக்காலத்துப் பூர்த்தி செய்து கொள்ளல் வேண்டும்?

2. இவடத்தில் சாஸ்திரீயமான தொழு எருக்கிடையாது; ஆனால் வண்டிப் பேட்டைகளிலுள்ள சாணியும் வெறும கழிவு வைக்கோலு முள்ள எரு அகப்படும். அதுவும் வண்டி வாடகையுடன்

ரூ 3-4 ஆகிறது. இது ஏக்கருக்கு எத்தனை வண்டிவீதம்? எப்போது? உபயோகப் படுத்தவேண்டும்? அல்லது கரும்பு புத்தகத்தில் இவ்வுரத்திற்கு அளவு சொல்லப்படாததால் கிடைத்த மட்டில் போதுமா? இவ்விடங்களில் கரும்புவைத்த மூன்றுவது மாதம் மூட்டுக்குப் பக்கத்தில் வைக்கிறார்களே! யாது செய்கிறது? (இத்தொழு எருசாஸ்திரீயமாய் இப்பொழுது சேகரித்து வருகிறேன்)

3. தனி எருவையோ முன்னாடியே நிலத்தில் பதியச்செய்துமட்கச் செய்யமார்க்கமில்லை. ஆனால் கூறிய நிலத்தில், இதற்கு முன் கலாயான் உண்டு. ஆதலால நார்சம்பந்த முடையதக்கைப் பூண்டைவிதைத்து, மண்ணணைக்கும் போதுமட்கச் செய்விக்க மனமில்லை. ஆதலால் கோதுப்பயிர்கள், மிக்க நார்சம்பந்த முடையனவாதலின், கரும்புப் பயிருடன் அதைவிதைத்து, மண்ணணைக்குங் கால் தூரிலணைக்கலாமா? ஆயின் கோதுப் பயிர்களில் எது சீக்கிரம் மட்கக் கூடியது?

4. "கிருஷிகன்" IVம் வால்யம் 1-வது பிரதியிற்றாங்கள் படமிட்டுக் காட்டியபடி கரும்புப் பயிருக்குக் கால் போடவுத்தேசம். அதில் பாரின் மத்தியின் ஒரு அடிக்குழி தோண்டி கரணைகளின் பக்கலிலுள்ள நீரை உறிஞ்சவும்; புழு, பூச்சிகள் அணுகாவண்ணமும், குழியிற் சாம்பலிட்டு, கரணைகளைப் படுக்க வைத்துப் பதிப்பது நலமெனத் தோற்றுகிறது. அது சரிதானா? ஆயின் கரணைகளின்மேல், மண் அல்லது சாம்பல் இடவேண்டுமா? ஏதாயினும் எத்தனை விரல் மூடப்படவேண்டும்? அல்லது சாம்பலை நெடுகத் தெளித்தல் நலமா? இது ஏக்கருக்கு எத்தனை வண்டிவீதம் உபயோகிக்கவேண்டும்?

5. பயிரில் நோய்காணில் அப்போது சுண்ணாம்பையும், பக்ஷிமலத்தையும், ஷேகரும்புப் புத்தகம் எருவாகச் சொல்லுகிறது. அவற்றைக் கரும்பு நடு முன்னமே புழுதியிற் சேர்த்து உபயோகிக்கலாமா? ஆயின் ஒவ்வொன்றும் ஏக்கருக்கு எவ்வளவு? எப்படி உபயோகிக்கவேண்டும்?

II நடவில்

1. கரும்புப் புத்தகம் 31-ம் பக்கத்தில் கரணைகளை ஈர நிலத்தில் நட்டவுடனே ஜலம் பாய்ச்ச வேண்டும் எனக் கண்டிருக்கிறது; புழுதிப் பயிர்களுக்கு புழுதியில் அல்லது ஜலம் பாய்ச்சி, முறையே விதைப்பதும், நடுவதும வழக்கம். ஜலம் பாய்ச்சிக் கரும்பை நடுவதெனில் நடவு அசௌளகரியமாம். புழுதியில் விதையைப் பதித்து உடனே தண்ணீரைப் பாய்ச்சலாம்; ஆயின் ஈரமுள்ள நிலம் என்னும் பதத்திற்கு அர்த்தம் கொடுக்க இடமில்லையே! அல்லது குழிகளில் மட்டும் ஜலத்தைதவார்த்து, விதையைப் பதித்து, பின் நீர் பாய்ச்சவேண்டுமா? எப்படிச் செய்யவேண்டும்?

2. முற்கூறிய பார், கால், இவைகளின்படி கணக்கிடில் இரண்டரைஅடிக்கு ஒரு கரும்பு வெனவாகிறது. கரும்புகண் விலாப்பக்கத்தில் சிம்புவெடித்துப் பக்சம்வைக்கு மியல்புடைத்தாதலின் நிகளவசத்தில் எத்தனை அடிக்கு ஒரு குழி அமைக்கவேண்டும்? அதாவது அதே $2\frac{1}{2}$ அடிகொடுக்க வேண்டுமா? குறைத்துக் கொள்ளலாமா?

3. கூறிய குழிகளில் கரணைகள் எத்தனைபதித்து நடவேண்டும்? இப்பிராந்தியங்களில் 2 கணுவுள்ளவிதை, மூன்றைப் பதிக்கிறார்கள். ஒன்று அல்லது இரண்டு போதாதா?

4. கரையான் உபத்திரவத்திற்கு வியவசாயப் பஞ்சாங்கப்படி கோல்டார் சோப்பு இவற்றால் செய்தலோஷனில்கரணைகளைத் தோய்த்து, முன்னரேதடுத்தல் முறையில், நட வுத்தேசம். இதில் கோல்டார் என்பது கடைகளில் விற்கும் தார் எண்ணைதானா? வேறு மருந்தா?

5. கருப்புடன் வெண்டை, மக்காச்சோளம் இவற்றைக் கலந்து பயிரிடின் கரும்பிற்கு நேரிடும் சில நோய்கள் விலகும் எனப் படித்த கியாபகமுளது. அவ்விரண்டு பயிர்களையு மிடலாமா? அல்லது வேறு பயிர்கள் கரும்புடன் விரோதமடையாத கலப்புப் பயிர்கள் ஏதேனுமுண்டா?

6. * முத்துக் கொட்டைப் புண்ணாக்கு ஏக்கருக்கு 10 மூடை வீதம் மண்ணணைக்கும் போது இட்டுக கொள்ளுகிறேன்.

III தொழு எருவில்.

எனக்குக் கிடைக்கக் கூடிய சொற்பத் தொழு எருவை, கிருஷிகன் 9-வது வால்யம், 5-வது புத்தகம் 131-ம் பக்கபபடி செயற்கைத தொழுஎருவுடன் சேர்த்து எருவை அதிகரிக்கச் செய்யவுத்தேசம். இங்கு சேர்கும் எரு, புஞ்சைப் பயிருக்காதலின் நன்றாகமட்கச் செய்ய வேண்டிய தவசியம. ஆனால் ஆண்டு (5-வது புததகத்தில்) வெயில், மழை, விழாமல் தடுக்கக கூறியிருக்கிறது. ஆயின் சூர்ய வெப்பம் படாமலும், நிழல் விழக்கூடியதுமான ஓர் தட்டுப்பந்தலுக்குள் எருக்குழி யமைததாற் போதாதா? ஏனெனில் மழை ஜலம் குழிக்குள் விழினும் குழி ஆழமாய் வெட்டப் படுவதால் உரச்சத்து ஜலததுடன் வெளிச்செலலா. சுற்றுச் சுவர்களிருப்பதால் வெளிச்சலமும உள்ளுக்குவாரா. மழை ஜலம விழுதலின் எருவும் அரை குறையின்றி நன்றாக மட்கிப் போவதுடன் ஒழுகாப்பநதலிடுவதினாலுள்ள சிலவும் தண்ணீரை எடுத்துவிடுவதினாலுள்ள சிரம நீக்கமும் சிலவும் லாபகரமாகிறது, ஆதலால் தட்டுப் பந்தலாவது மரத்தின் அடர்ந்த நிழலாவது போதாதா?

கோட்டூர் இசைக்கியாடும் பெருமாள் பிள்ளை

பதில்

1. எண்ணூறு ஆடு குருணிக்கிக் கட்டுவதுடன் வேறு எருக் களும் போடலாம். நன்ருய் மக்கின மாட்டுச் சாணியையும் உபயோ கிக்கலாம். நடும் முன் குருணிக்கி எண்ணூரு ஆடு கட்டினுல் பயிர் முளைத்த 40 நாளைச் கெல்லாம் புண்ணுக்கு முதலிய எருக்களைப் போடலாம். பயிர் நடும் முன் நன்ருய் செமித்த (மக்கிப) கக் கூஸ் எருவையும் போடலாம், ஏக்கரா ஒன்றிற்கு 4 முதல் 5 வண்டி பாரம் போடலாம். பயிர் முளைத்த பின் புண்ணுக்கை எருவாய் உபயோகித்தால் 3 மாதத்திற்குள் கொஞ்சம் கொஞ்சமாய் மூன்று தரம் வைக்கலாம். ஏக்கரா ஒன்றிற்கு 5 பாரம் மூன்று தடவை யில் வைக்கலாம்.

2. தொழு எருவையும் வண்டிப் பேட்டையில் கிடைக்கும் எருவையும் நன்ருய் மக்கியிருந்தால் நடும் முன்னுலேயே கக்கூஸ் எருவைப்போல் அவ்வளவு அளவு உபயோகிக்கலாம்.

3. கரையான் உள்ள பூமிகளில் அமோனியம் சல்பேட் என்னும் ரசாயன எருவை உபயோகித்தால் கரையான் உபத்திரவம் நீங்கும். விவசாயப் பஞ்சாங்கத்தில் கரையானைத் தடுப்பதற்குச் சொல்லியிருக்கும் முறையையும் கையாடலாம் கரையானுள்ள இடங்களில் நன்ருய் மக்காத தொழு எரு முதலியவைகளை உபயோ கிக்கக் கூடாது. கரையானை நாசம் செய்ய கிருஷிகன் 9-ம் வால்யும் 5-ம் நம்பர் 159-வது பக்கத்தையும் பார்க்க. பசுந்தாள் பயிர்களை கரும்பு நடும் வரிசைகளுக்கு மத்தியில் விதைத்து கரும்புக்கு மண் அணைக்கும்போது பிடிங்கிப்போட்டு மூடிஎருவாய் உபயோகிக்கலாம் கோதுப் பயிர்களில் காராமணி, கம்பு, கொள்ளு (காணம்) முதலி யன சிக்கிரம் மக்கும்.

4. கிருஷிகன் 4-வது வால்பம் 1-வது பிரதியில் குறித்தபடி இரண்டடி மண் கண்டமாவது உள்ள இடங்களில் கரும்புப் பயிர் செய்யலாமேயொழிய சமீபத்தில் பாறையுள்ள இடங்களில் செய்யக் கூடாது.

கரும்புக் கருணைகளை நடும் போது முளைகள் பக்கவாட்டாய் இருக்கும்படி நடவேண்டும். கரணைகளின் மேல் முக்கால் அங்குலத் திற்கு மேல் மண்ணுவது சாம்பலாவது போட்டு மூடக்கூடாது. அத ற்கு அதிகமாக மண்போட்டு மூடினுல் கரும்பு சரியாய் முளைக்காது. ஏக்கருக்கு சுமார் 5, அல்லது 6 வண்டி சாம்பல் தெளிக்கலாம்.

கரும்புப் பயிருக்கு அனேக நோய்கள் தாக்குவதுண்டு. வெவ் வேறு நோய்களுக்கு வெவ்வேறுசிகிச்சைகள் செய்யவேண்டும். நோய் தாக்கில் பட்சி மலமுபயோகிக்க வேண்டுமென்பதின் கருத் தென்னவெனில் அச்சந்தர்ப்பத்தில் பட்சி மலத்திலிருக்கும் சுலப

மாய் தண்ணீரில் கரைந்துபயிர்களால் எடுக்கக்கூடியஎருச்சத்தின்உதவியால் பயிர் வீரியமாய் வளர்ந்து அக்ராணத்தால் ஒருவேளை அங்கோபின் பாதையால் பீடிக்கப்பட மாட்டாதென்பது தான்.

6. கரும்புக்குப் புண்ணாக்கு தினுசுகள் எருவாய் உபயோகிக்கும்போது 10 மூட்டை புண்ணாக்கையும் ஒரே தடவையில் உபயோகிக்காமல் அந்த அளவையே மூன்று தடவைகளாய் கரும்பு நட்ட நாலு மாதங்களுக்குள்களை வெட்டி மண் அணைக்கும்போது உபயோகித்தால் நல்ல பலன் தரும். இதுபரீட்சார்த்தமாய் கண்டறிந்த சங்கதி.

ஈரமுள்ள நிலம் என்பதற்கு அர்த்தம் என்னவென்றால் சாதாரணமாய் புழுதியில் விதைகளை விதைக்கு முன் இருக்கும் ஈரப்பதம். கரும்பை நடும் முன் ஜலம் பாய்ச்சி சேருயிருக்கும்போது நடுவதும் உண்டு. புழுதிப் பயிர் விதைப்பது போலுள்ள பதத்தில் நட்டு ஜலம் பாய்ச்சுவதும் உண்டு. இரண்டு விதங்களிலும் பயிர் ஒரே மாதிரிதான் வளரும். குழிகளில் மாத்திரம் ஜலத்தை வார்த்து சேருக்கி அதில் கரணைகளைப் புதைத்தால் அன்றே அதற்கு நீர் பாய்ச்ச வேண்டியதில்லை.

2. சாதாரணமாய் கரும்புகள் நடும்பார்களுக்காவது கிடங்குகளுக்காவது மத்தியில் மூன்றடி முதல் ஐந்தடி வரை இடம் விடுவது சாஸ்திரீக முறையில் கரும்புப் பயிர் செய்பவர்களுடைய கொள்கை. ஒரேபாரில் (கிடங்கில்) ஒரு கரணைக்கும் மற்றொரு கரணைக்கும் மத்தியில்அரையடிமுதல் முக்கால்அடி வரை இடம்விடும் வழக்கம் உண்டு. குழிகளில் கரணைகள் நட்டால் மூன்றரை அடிக்கொரு குழி போடுவது நன்று.

3. குழிகளில் கரணைகள் ஒன்று நடுகிறவர்களும் உண்டு, இரண்டு நடுகிறவர்களும் உண்டு, தேங்காய்க் கண்போல் மூன்று நடுகிறவர்களும் உண்டு. நல்ல கரணைகளாயிருந்தால் ஒன்றே போதுமானது என்பதெமது அபிப்பிராயம்.

4. (Coaltar) கோல்டார் என்பது கடைகளில் விற்கும் தார் எண்ணெயில் செய்த சரக்குதான்.

5. கருப்புடன் பசுந்தாள் உரப்பயிர் செய்வது நல்லது. கலப்புப் பயிர் செய்வதினல் கரும்பில் அணுகக்கூடிய சில நோய்கள் கலப்புப்பயிர்களில் போய் விடும் என்ற நோக்கம் சிலருக்குண்டு.

கரும்பை தனிப்பயிராய் செய்வதே சிலாக்கியம் என்பது எமது துணிபு ஆனல் ஓரங்களில் பீர்க்கன், பூசனி, முதலானவைகளை வேலிகளில் படரவிட்டு பலனை யடையக்கூடும்.

தட்டுப் பந்தலுக்குள் எருக்குளி அமைத்தால் போதும். மரத்தின் அடர்ந்த நிழல், மாத்திரம போதாதென்பது எமதபிப்பிராயம்.

NEWS & NOTES.

மந்திர சக்தி.

உலர்ந்த வாழை 20 தினங்களில் துளிர்த்து குலை யீன்ற அற்புதம்

காசி வித்யா பீடத்துக் கருகே பாரதமாதா கோயில் கட்டுவதற்காக போன ஞாயிற்றுக்கிழமை ஸ்ரீமான் பகவான்தாஸர் அஸ்திவாரக் கல் பிரதிஷ்டை செய்தனராம். அமோக ஐஸ்வர்யவானாகிய சிவப்ரசாத குப்தா என்னும் கனவான் "இந்தியாவின்" படத்தை அமோக செலவில் தயாரித்து அங்கு வைக்கப் போகிறாராம். எல்லா வர்ணத்தாரும் ஜாதிபேதமில்லாமல் அங்கு போய் பூஜை செய்யலாமாம். 24-லட்சம் காயத்ரீ ஜெபம் ஜெபித்து 20 நாட்களாக எச்யம் செய்ததில் உலர்ந்துபோன வாழைத்தண்டு ஷெமந்த்ர மஹிமையால் தளிர்த்து, இலை விட்டு ஜெபம் முடியும்போது குலை விட்டதாம். ஸ்ரீமான் பண்டிட் மதன்மோஹன் மாளவ்யா போன்ற மேதாவிகள் சோதனை செய்து பார்த்து மந்திர மஹிமையால்தான் அவ்வாறு நடந்தேறியதாக அபிப்பிராயப் பட்டார்களாம்.

ஔவையார் காலத்தில் கலியாணத்திற்கு வந்திருந்த மூன்று அரசர்கள் ஔவையாரைச் சோதிக்க விரும்பி பன நுங்கு அகப்படாத காலத்தில் ஔவையாரை நுங்கு கேட்க அவ்வம்மை அங்கு கட்டப்பட்டிருந்த ஓர் பனந் துண்டை நோக்கி "பங்குக்கு மூன்று பழந் தரவேண்டும் பனந் துண்டமே" என்று சொன்னதும், அப் பனந்துண்டு இலைகளை விட்டு, பூத்து காய்த்ததாகவும் ஔவையார் அதிலிருந்து நுங்கு வெட்டி அம் மூன்று அரசர்களுக்கும் கொடுத்ததாகவும் எழுதப்பட்டிருக்கிறது.

நமது முன்னோர் காலம் முதல் நடந்தேறிவரும் பழக்கங்களையும், வைதீகக் கிரியைகளையும், மந்திரங்களையும், மதியாமல் அவை யாவும் மதியீனமாய்ச் செய்யும் காரியங்களென நினைத்து தம் மனம் போன்றவாறு நடத்தச் சொல்லும் நமது நவ நாகரீகம் பொருந்திய நண்பர்களை இதைச் சற்று சிந்தித்துப் பார்க்கும்படி வேண்டிக் கொள்ளுகிறோம்.

எள்ளுப் பயிர்.

1924 - 25ம் வருஷக் கணக்குகளின் படி இந்த இராஜதானியில் இப் பயிர் இந்தியா முழுவதிலும் சாகுபடி செய்த விஸ்தீரணத்தில் 100க்கு 12-3 பாகமென்று புலப்படுகிறது. சென்ற வருஷத்தைவிட இந்த இராஜதானியில் இது 1926ம் வருஷ டிசம்பர் மீ வரை குறைவாகவேசாகுபடியாயிருக்கிறது. அனேகமாய் 100-க்கு 24-பங்கு குறைந்திருப்பதாகக் கணக்குகள் காண்பிக்கிறது. இக் குறைவு கோதாவரி, செங்கல்பட்டு, தென் ஆற்காடு வட ஆற்காடு, சேலம் ஜில்லாக்களில்தான். இந்த ஜில்லாக்களின் மொத்த விஸ்தீரணம் சென்ற வருஷம் 246500 எக்கர்களாயிருக்க இவ் வருஷத்தில் 104000 ஏக்கர்களாய்தானிருக்கிறது. ஆகவே அனேகமாய் பாதி விஸ்தீரணத்துக்கும் குறைச்சலே. ஆனால் பெல்லாரியிலும அநந்தபூர் ஜில்லாக்களில்மாத்திரம் சென்ற வருஷம் மொத்தத்தில் 24500 எக்கர்கள் சாகுபடியாயிருக்க இவ் வருஷம் 45500 ஏக்கர்கள் சாகுபடியாயிருக்கிறது, திருச்சினப்பள்ளி ஜில்லாவிலும் சென்ற வருஷம் 31500 ஏக்கர் சாகுபடியாயிருக்க இவ் வருஷம் 42000 ஏக்ராக்களால் ஜாஸ்தியாயிருக்கிறது. இப் பயிர் இவ் வருஷம் சரியான மாசூல் கொடுக்கவில்லை. சென்ற வருஷத்திய மாசூலைவிட இவ் வருஷம் கம்மியாய்தான் கிடைக்குமென்று கவர்ன்மெண்டார் கணக்கிட்டிருக்கிறார்கள்.

மாற்றுப் பத்திரிகைகளாக எமது பார்வைக்கு அனுப்பும் பின்கண்ட பத்திராதிபர்களுக்கு எங்கள் மனமார்ந்த வந்தனமளிக்கின்றோம்.

சென்னை:—(1) லோகோபகாரி (2) லக்ஷ்மி (3) ஆரம்பாசிரியன் (4) மஹாவிகட தூதன் (5) தேசபந்து (6) பாலவிநோதினி (7) ஆநந்தபோதினி (8) ஆநந்தகுண போதினி (9) ரூரல் இந்தியா (10) விநோதினி (11) ஜகன்மோகினி (12) ஒற்றுமை (சைதாப்பேட்டை).

கும்பகோணம்:—(1) பாரதமித்திரன் (2) யதார்த்தவசனி (3) தெய்வ பக்தன் (4) பிராம்மணன்.

திண்டுகல்:—(1) ஆஸ்ரமபோதினி (2) முத்துராஜன் (3) நகரதூதன்.

திருச்சி,—(1) இந்தியபத்தாய் (2) நச்சினார்க்கினியன் (3) பிராஜாநுகூலன் (ஸ்ரீரங்கம்).

புதுவை:—(1) சுகாபிவிருத்தினி (2) கற்பகம்.

சிலோன்:—(1) கமத்தொழில் விளக்கம் (2) ஹிதாயத்துல் இஸ்லாம்

ஈரோட்:—(1) குடி அரசு (2) ஆநந்த விஜயன்.

ரங்கூன்:—(1) சுதேசபரிபாலினி (2) சுதேச நண்பன்.

புதுக்கோட்டை:—(1) தேசஊழியன்.

காரைக்கால்:—(1) நியாயாபிமானி.

மாயவரம்:—(1) அகிலபாநு.

தென்காசி:—(1) முசல்மான்.

பள்ளத்தூர்:—(1) அருணகிரி.

ஏனங்குடி:—(1) ஞானோதயம்.

திருவாரூர்:—(1) நவ இந்தியா.

வேலூர்:—(1) சோதிடகலாநிதி.

தஞ்சாவூர்:—(1) தஞ்சை மித்திரன்.

காயல்பட்டணம்:—(1) கமருள் ஸமான்.

மதுரை:—(1) வைத்ய சந்திரிகா.

திருவிடைமருதூர்:—(1) தொழிற்கல்வி.

கரூர்:—(1) வைத்திய சந்திரிகா.

திருத்தங்கல்:—(1) கம்மபாலன்.

திருவடி:—(1) ஜனாநுகூலன்.

"கிருஷிகன்" பஞ்சாங்கம்.

பிரவஹு சித்திரைமீ—சாலிவாகன 1850 கலியுகாதி 5029,
பசலி 1336—கொல்லம் 1102—ஹிஜரி 1345,
இங்கிலீஷ் 1927ம்ஹு எப்ரல்மீ—மேமீ

ரம்ஜான்மீ	எப்ரல்மீ	சித்திரைமீ	வாரம்.	திதி.	நக்ஷத்திரம்	யோகம்	விசேஷங்கள்
11	13	1	புத	து49-45	பூரம்59-59	அ60	விஷு புண்ய காலம்
12	14	2	வியா	திர55-55	பூரம்2-11	சித் 2ம	விதைக்க
13	15	3	வெ	சது59-59	உத்9-38	சித்9அ	பொன்னேர் கட்ட
14	16	4	சனி	ச○1-58	அஸ்17-3	மர60	சித்ரா பௌர்ணமி
15	17	5	ஞா	பௌ7-43	சித்23-58	சித்60	தானியம் செலவிட
16	18	6	திங்	பிர13-5	சுவா31-3	அ30ம	விவசாயம் செய்ய
17	19	7	செவ்	துதி17-43	விசா 36-25	ம36சி	தானியம் அறுக்க
18	20	8	புத	திரி21-43	அனு 41-33	சித்60	சர்வ முகூர்த்தம்
19	21	9	வியா	சது24-41	கேட்45-43	பி45சி	கிணறுவெட்ட
20	22	10	வெ	பஞ்26-35	மூல48-43	அ48பி	விருக்ஷங்கள்நட
21	23	11	சனி	சஷ்27-5	பூரா51 15	சித்60	கரும்புநட
22	24	12	ஞா	சப்25-58	உத்51-13	அமி60	சங்கு ஸ்தாபனம்
23	25	13	திங்	அ23-13	திரு 48-43	அ48சி	ஏர் கட்ட
24	26	14	செவ்	நவ18-45	அவி45-23	சி4 ம	கிரஹப்பிரவேசம்
25	27	15	புத	தச12-51	சதை41-43	சி40	பூமி கொள்ள
26	28	16	வியா	ஏகா5-38 து54.22	பூரட்34-58	சித்60	ஏத்தம் போட
27	29	17	வெ	திர48-38	உத்28-23	சி28அ	விருக்ஷங்கள் நட
28	30	18	சனி	சது39-38	ரேவ21-18	ம21சி	விதைக்க
29	1	19	ஞா	●31-45	அஸ்14-21	சித60	சர்வ அமாவாசை
30	2	20	திங்	பிர22-38	பர*8-1	சித்8மர	விருக்ஷங்கள் வெட்ட
1	3	21	செவ்	துதி15-38	கிரு2-28 ரோ57-32	சித்2அ	கிணறுவெட்ட
2	4	22	புத	திரி11-3	மிரு56-3	சித்60	கத்திரி ஆரம்பம்
3	5	23	வியா	சது6-12	திரு55-38	ம55அ	சூளைக்கு நெருப்பிட
4	6	24	வெ	பஞ்4-18	புன57-8	சித்57ம	கிருஷி ஆரம்பம்
5	7	25	சனி	சஷ்4-25	பூசம்59,59	சித்60	பசு வாங்க
6	8	26	ஞா	சப்6-23	பூசம்1 1	சித்60	சாந்தி செய்ய
7	9	27	திங்	அ11-3	ஆயி4-53	சித்5ம	குளம் வெட்ட
8	10	28	செவ்	நவ14-53	மக12-1	சித்60	விதைக்க
9	11	29	புத	தச21-4	பூர19-5	அமி60	மாடுகள் வாங்க
10	12	30	வியா	ஏகா26-45	உத்26-35	ம26சி	விதைக்க
11	13	31	வெ	து32-38	அஸ்33-53	அ33சி	தானியம் அறுக்க

"கிருஷிகன்"

சந்தா முதலிய விவரங்கள்

(1) எந்தமாதத்தில் சந்தா தாராய்ச்சேர்ந்த போதிலும் அந்த வரு சித்திரை மாதத்திலிருந்துதான் கணக்கு வைக்கப்படும். கூடிய வரையில் அந்தந்த வருஷத்திய முந்தின சஞ்சிகைகளைக் கொடுக்கப்படும்.

(2) வருஷ சந்தாவாகிய ரூபாய் ஒன்றை காலணுதபால் முத்திரைகளாக வாகிலும், அல்லது மணியார்டர் மூலமாயும் அனுப்பலாம்: வெளி நாட்டார் ரூ 1—4—0 அனுப்பவேண்டும்.

வி. பி. மூலமாய் பத்திரிகை அனுப்பினல் ரூ 1—4—0 கொடுக்க வேண்டிவரும். அப்படிச் செய்வதால் உங்களுக்கு அனாவசியமாய் 2 அணு நஷ்டமாவதால் பத்திரிகை வி. பி. மூலமாய் அனுப்பப்பட மாட்டாது. வெளி நாட்டிற்கு வி. பி. அனுப்ப முடியாது.

(3) பத்திரிகை தவருது பிரதி தமிழ் மாதம் முதல் தேதி இங்கிருந்து அனுப்பப்படும். பத்திரிகை குறிப்பிட்ட காலத்தில் தங்களுக்குச் சேரா விட்டால் அப்போதே நமக்கு அவ்விஷயத்தைத் தெரிவித்தால் பத்திரிகை சேராத விஷயத்தைப் பற்றி விசாரணை செய்வோம். 7 தினங்களுக்கு அதிகமாய் தாமதித்து எழுதும் கடிதங்கள் கவனிக்கப் பட மாட்டா.

(4) விவசாயமும் அதைச் சார்ந்த விஷயங்களும் தவிர இதர விஷயங்கள் இப்பத்திரிகையில் வெளிவரா. அதிலும் எவ்வித நிந்தனையுள்ள விஷயங்களும் அங்கீகரிக்கப் படமாட்டாது.

(5) மானேஜருக்கு கடிதம் எழுதும்போது தங்களுக்கு வரும் ஒவ்வொரு பத்திரிகையிலும் தங்கள் பேருக்கு முன்னுலிருக்கும் நம்பரைக் குறிப்பிட்டு எழுத வேண்டும். தயவு செய்து Registered No. M.2147 என்று அச்சடித்திருப்பதை எழுதக் கூடாதென்று எச்சரிக்கிறோம்.

(6) பதில் பெற விரும்புவோர் தபால் முத்திரைகள் அனுப்புதவசியம்.

(7) இப்பத்திரிகையின் சகல உரிமைகளையும் சட்டப்படி ரிஜிஸ்டர் செய்திருப்பதால் இதில் எழுதும் விஷயங்களை அனுமதியின்றி எவரும் எடுக்கக்கூடாது.

"கிருஷிகன்" மானேஜர்.

ஜெகந்நாதபாக், சைதாபேட்டை

திருப்பூர்

கம்போடியா காட்டன் பிளாண்டிங்

அண்ட் கதர் மென்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட்,

கலியுகத்தில் சகல தேசத்தினராலும்
சகல மதத்தினராலும் அவதார புருஷனெனப்
போற்றும் "மஹாத்மாகாந்தி" அவர்களிடம் அன்புண்டா?

அப்படியானல் அவருடைய முக்கிய கொள்கையான கத்தர் அபிவிர்த்திக்காக சதாகாலமும் தம்உடல் பொருள் ஆவி இம்மூன்றையும் தத்தம் செய்திருக்கிறார். அவர் ஞாபகார்த்தமாய் ஸ்தாபித்திருக்கும இக்கம்பேனியில் பங்குகள் எடுததுக் கொண்டு ஆதரிப்பது தங்கள் கடமை யன்றோ? பங்குகளுக்கு அதிக லாபம் கிடைக்குமென்பதில் சந்தேகமில்லை. இந்தியாவில் தமிழ் நாட்டில் திருப்பூர் கத்தர் உற்பத்திக்கு மிகவும் பெயர் பெற்றிருப்பது உலகமறிந்த விஷயம். திருப்பூர் கம்போடியா காட்டன் பிளாண்ட்டிங் அண்ட் கத்தர் மென்யுபாக்சரிங் கம்பெனி லிமிடெட் ஆபீஸ். அங்கேரிபாளையும் (அனுப்ப பாளையம் P O கோயம்புத்தூர் ஜில்லா)

ரிஜிஸ்டர் செய்த மூலதனம் ரூ3,50,000 பங்கு 1—க்கு 10-ரூபா வீதம். 35,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டது. இது பரியந்தம் கொடுக்கப்பட்ட பங்குகள் ரூ. 1,61,600. இன்னும் கொஞ்சம் பங்குகள் தான் கொடுக்க உத்தேசம். தகுந்த லாபம் பங்குகளுக்குக் கிடைக்கு மென்பதில் சந்தேகமில்லை.

ஸ்பெஷலாக டிபாசிட்டுகளுக்கு தகுந்த வட்டி கொடுக்கப்படும். 5. வருஷத்திய டிபாசிட்டிக்கு 100-க்கு 1 வருஷத்துக்கு 10-ரூபா வீதம் வட்டிக்கு பெற்றுக் கொள்ளப்படும். சகலமான டவுன்களுக்கும் தக்க கமிஷன் பேரிலும் சம்பளத்தின் பேரிலும ஏஜண்டுகள் தேவை, இக்கம்பெனியை சென்னை கவர்ன்மெண்டு விவசாய அசிஸ்டெண்டு டைரக்டர் ஸ்ரீமான். K. N. K. சுந்திரம் அவர்கள், தாசில்தார், வக்கீல்கள் மதராஸ் N. தண்டபாணிப் பிள்ளை முதலிய அனேக கனவான்கள் விஜயம்செய்து தகுந்த சர்டிபிகேட்டுகள் கொடுததிருக்கிறார்கள். இன்றே இந்த விளம்பரத்தை வெட்டி யனுப்புங்கள்.

ஐயா, இக்கம்பெனியில் நான்......பங்குகள் எடுத்துக் கொள்ள விரும்புகிறேன். ஆதலால் தயவு செய்து பங்கு விண்ணபபத்தை கீழ்கண்ட விலாசத்திற்கு அனுப்பக் கோருகிறேன்.

முழுப் பெயர்..

பூரா விலாசம் தொழில் விபரம்..

தபால் ஆபீஸ்..

ஜில்லா...

குறைந்த விலை **ஜகன் மோகினி.** நிறைந்த சுவை

இது ஓர் தமிழ் நாவல்களடங்கிய மாதாந்தர சஞ்சிகை

இதன் நான்காவது ஆண்டில் ஸ்ரீமதி வை. மு. கோதை நாயகி அம்மாளால் எழுதப்பட்ட பத்மசுந்தரன் என்னும் விநோதமான துப்பறியும் நாவல் வெளியாகின்றது. இதன் வருடசந்தா உள்நாடு வெளிநாடு இரண்டிற்கும் ரூபா 1-8-0. மாதிரிப்பிரதி அணா 3. இதன் சந்தா நேயர்களுக்கு சென்றஆண்டில் வெளியான வைதேகி இரண்டு பாகங்களும் ரூபா 2-க்குக் கொடுக்கப்படும். 5 சந்தாதாரர் களைச் சேர்த்துக் கொடுக்கும் நண்பர்களுக்கு 1 வருஷ சஞ்சிகையும் 12 பேர்களைச் சேர்த்துக் கொடுப்பவர்களுக்கு வைதேகி 2-பாகங்களும் 1- வருஷ சஞ்சிகையும் இனமாகக் கொடுக்கப்படும்.

"ஜகன மோகினி" ஆபீஸ்,

26. தோடித் தெரு, திருவல்லிக்கேணி, Madras.

கம்மபாலன்

தமிழ் மாதப் பதிப்பு

தென்னாட்டில் கம்ம ஜாதியப் பத்திரிகை இஃதொன்றே. கிராம வாசிகளுக்கவசியமான பொது விஷயங்கள் வெளிவரும். விளம்பரங்களுக்குத் தக்க சௌகரியமுண்டு. வருட சந்தா ரூ. 1. தான்.

ஐக்கிய சங்கங்களுக்கும், பஞ்சாயத்துகளுக்கும் வேண்டிய புத்தக பாரங்கள் எம்மிடம் கிடைக்கும்.

R. வேங்கிடசாமி நாயுடு.

பத்திராதிபர் கம்மபாலன்.

திருக்காங்கல்

விவசாய புஸ்தகங்கள்

	ரூ அ பை
விவசாய விளக்கம்	1—4—0
நெல்	1—0—0
கரும்பு	1—0—0
மா	0—7—0

தபால் சார்ஜ் வி. பி. முதலியன பிரத்தியேகம்

ஜி. இராஜகோபால் நாயுடு

பென்ஷண்ட் விவசாய இன்ஸ்பெக்டர்

பெரியபாளையம் போஸ்ட், பொன்னேரி மார்க்கம்

Printed at the "Raju Press" and Published by Rao Bahadur J. Chelvaranga Raju at Saidapet MADRAS.